D
V 211,31'N96
N90.35.1
143987

வெளியீடு 5–3–1991 Issued 5-3-1991

நாடு அவணக்காப்பகம் ★
19 ஜுன் 1991
சென்னை -600008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஆகஸ்ட் 20, 1990 - தொகுதி 35 - எண். 1
Monday, the 20th August, 1990-Volume 35-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price: Rs. 3-00

143987
சென்னை-600 009
D
V211,31 N90
N90.3591

உள்ளடக்கம்

20—8—1990

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | iii—vi |
| Personnel of the Government of Tamil Nadu. | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். .. .. .. .. | xi, xiii—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)) .. .. | xv—xxiv |
| **இரங்கற் குறிப்புகள்—** | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு .. .. | 1—2 |
| **வினாக்கள் - விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 2—37 |
| **தகவல் கோரல்—** | |
| பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளில் ''வினா—விடை நேரம்'' இடம்பெறுவது குறித்தும் சில உறுப்பினர்களின் இருக்கைகள் மாற்றப் பெற்றுள்ளது தொடர்பாக நீதிமன்றத்திலும், குடியரசுத் தலைவரிடத்திலும், அவையிலும் எழுப்பப் பெற்றுள்ள பிரச்சினைகள் குறித்தும் .. | 37—49 |
| **அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் .. | 49 |
| (ஆ) பணியிலிருந்து ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களைப் பாராட்டி 12—5—1990 ஆம் நாளன்று அவை நிறைவேற்றியுள்ள தனித் தீர்மானத்திற்கு அவர்கள் நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதம். .. .. .. | 49—50 |
| (இ) முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1990-91—வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து. .. .. .. .. | 55 |

பக்கங்கள்


5. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

(அ) மாவட்ட நகராட்சிகள், (இரண்டாம் திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) சட்ட முன்வடிவு, 1990. .. .. 50

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. 51

(இ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990. .. .. 51

6. முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1990-91—அளித்தல் .. .. .. .. 51—55

7. அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு. 56—58

8. பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளை ஆதாரமாகக் காட்டி சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு அளித்த மனுக்களில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் பேரவை உறுப்பினர் பதவி தகுதியின்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளதை யொட்டிய தீர்ப்பு. .. .. .. 59—60

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 60—68




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

**ஆளுநர்—திரு. சுர்ஜித்சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும்ஆயத்துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் ,தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்— அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சிட்டு நிதி இவைபற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வஃப்.

வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

| | |
|---|---|
| 5. போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரகவளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக்கடன் சம்பந்தப்பட்டவை. |
| 8. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 10. பொதுப்பணித்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுப் பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உட்பட), திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |



| | |
|---|---|
| 11. சமூக நலம்- ஊரகத் தொழிற்துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 12. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச்சூழல் மாசு கட்டுப்படுத்தல். |
| 13. செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே.என். நேரு: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால்வளம். |
| 14. கைத்தறி— நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு, மற்றும் குடிசை மாற்று வாரியம். |

| | |
|---|---|
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 16. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. சுந்தரம் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ், பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர். | திரு. எல். கணேசன் |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | THE HON. DR. M. KARUNANIDHI: Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | THE HON. DR. K. ANBAZHAGAN: Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | THE HON. THIRU S. J. SADIQ PASHA : Law, Courts, Prisons Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money-lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | THE HON. THIRU NANJIL K. MANOHARAN : Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | THE HON. THIRU M. KANNAPPAN : Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |

| | |
|---|---|
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | THE HON. THIRU K. P. KANDASAMY: Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |
| 7. Minster for Rural Development and Local Administration. | THE HON. THIRU KO. SI. MANI: Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness. |
| 8. Minister for Food and Co-operation. | THE HON. THIRU PON. MUTHU RAMALINGAM: Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9. Minister for Agriculture .. | THE HON. THIRU VEERAPANDI S. ARUMUGAM: Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block District and Apex Level including the Federation and Food Production. |
| 10. Minister for Public Works .. | THE HON. THIRU DURAIMURUGAN: Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works Highways and Electricity. |
| 11. Minister for Social Welfare and Rural Industries. | THE HON. TMT. SUBBULAKSHMI JAGADISAN: Social Welfare including Children and Women's Welfare, Beggars, Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |



| | |
|---|---|
| 12. Minister for Public Health .. | THE HON. DR K. PONMUDI alias DEIVASIGAMANI: Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |
| 13. Minister for Information and Labour. | THE HON. THIRU K. N. NEHRU: Information and Publicity, Film-Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint control, Stationery and Printing, Government Press and Milk. |
| 14. Minister for Handlooms and Urban Development. | THE HON. THIRU S. THANGAVELU: Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board. |
| 15. Minister for Animal Husbandry. | THE HON. DR. K. CHANDRASEKARAN: Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 16. Minister for Adi-Dravidar Welfare. | THE HON. K. SUNDARAM: Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| Parliamentary Secretary to Chief Minister. | THIRU L. GANESAN. |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. நா. இராமச்சந்திரன்

திரு. அ. இராசேந்திரன்

திருமதி எஸ். பி. சற்குணம்

திரு. ரா. சொக்கர்

திரு. வி. கே. சின்னசாமி

திரு. சோ. அழகர்சாமி.

செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி. ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர், பி.ஏ. .. | துணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. .. | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு, தா., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| கோவிந்தராஜன், திரு. ஆர். .. .. | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி. பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.ஏ. பி.எல்., | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. சு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி., .. பி.எஸ்ஸி., பி.ஜி.எல் | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி. | | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. ந., எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி.சி., பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. சு., பி.ஏ.,பி.எல். | .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. .. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'அ'** | |
| 1. அங்கமுத்து, திரு. கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 2. அசேன், திரு. ஜெ. | இராணிப்பேட்டை. |
| 3. அண்ணாதுரை, திரு. கா. | பட்டுக்கோட்டை. |
| 4. அண்ணாதுரை, டாக்டர் கே. | வரகூர் (செ.வ.). |
| 5. அண்ணாநம்பி, திரு. ஆர். | அவிநாசி (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு. எம். | அரூர் (செ.வ.). |
| 7. அதியமான், திரு. ஆ. | சேடப்பட்டி. |
| 8. அப்துல்சமத், திரு. பா. | வாணியம்பாடி. |
| 9. அப்துல் லத்தீப், திரு. எம். | சேப்பாக்கம். |
| 10. அர்ஜுனன், திரு. கே. | தாரமங்கலம். |
| 11. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 12 அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 13. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 14. அன்பழகன், டாக்டர் க. | அண்ணா நகர். |
| 15. அன்பழகன், திரு. வ. | செய்யாறு. |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |
| **'ஆ'** | |
| 17. ஆசையன், திரு. பெ. | ஆண்டிபட்டி. |
| 18. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 19. ஆறுமுகம், திரு. த. | அரியலூர். |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | சேலம்-2. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'இ'** | |
| 21. இரகுமான்கான், திரு. அ. | பூங்கா நகர். |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர். |
| 24. இராசன், திரு. வி. பி. | ராஜபாளையம் (செ.வ.). |
| 25. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.). |
| 26. இராசு, திரு. வெ. | குளத்தூர் (செ.வ.). |
| 27. இராசேந்திரன், திரு. அ. | போளூர். |
| 28 இராதா, திரு. எஸ். ஆர். | மதுரை கிழக்கு. |
| 29. இராதாகிருஷ்ணன், திரு. டி. | சோழவந்தான். |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. | கம்பம். |
| 32. இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம். |
| 33. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | விளாத்திகுளம். |
| 34. இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி. |
| 35. இராமசாமி, திரு. ஏ. எம். | ஆத்தூர். |
| 36. இராமசாமி, திரு. கே. வி. | கரூர். |
| 37. இராமசாமி, திரு. வி. | திருச்செங்கோடு. |
| 38. இராமசாமி, திரு. கே. ஆர். | திருவாடானை. |
| 39. இராமநாதன், திரு. மு. | கோவை மேற்கு. |
| 40. இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 41. இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர். |
| 42. இராஜேந்திரன், திரு. பி. வி. | வேதாரண்யம். |
| 43. இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.). |
| **'ஈ'** | |
| 44. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **'உ'** | |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 46. உதயசூரியன், திரு. தா. | சின்னசேலம். |
| 47. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | தஞ்சாவூர். |
| **'ஏ'** | |
| 48. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு. |
| **'க'** | |
| 49. கண்ணப்பன், திரு. மு. | பல்லடம். |
| 50. கண்ணன், திரு. எஸ். பி. | அணைக்கட்டு. |
| 51. கணபதி, திரு. என். | மயிலாப்பூர். |
| 52. கணேசமூர்த்தி, திரு. என். | குறிஞ்சிப்பாடி. |
| 53. கணேசமூர்த்தி, திரு. ஏ. | மொடக்குறிச்சி. |
| 54. கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 55. கணேசன், திரு. க. சொ. | ஜெயங்கொண்டம். |
| 56. கணேசன், திரு. சா. | தியாகராய நகர். |
| 57. கணேசன், திரு. வே. | மங்களூர் (செ.வ.). |
| 58. கந்தசாமி, திரு. கே. | கிணத்துக்கடவு. |
| 59. கந்தசாமி, திரு. கே. பி. | திருச்செந்தூர். |
| 60. கரீம், திரு. எம். கே. | கூடலூர். |
| 61. கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம். |
| 62. கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | சாத்தூர். |
| 63. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம். |
| 64. கண்ணையன், திரு. க. | தொட்டியம். |
| 65. கஜபதி, திரு. டி. ஆர். | ஆற்காடு. |
| 66. காஞ்சனா, டாக்டர் க. | கிருஷ்ணகிரி |
| 67. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். | முதுகுளத்தூர். |
| 68. காளியப்பன், திரு. பி. | ஒட்டன்சத்திரம் |
| 69. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| **'க'—தொடர்ச்சி.** | |
| 70. கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர். |
| 71. குணசேகரன், திரு. எஸ். | தலைவாசல் (செ.வ.). |
| 72. குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம். |
| 73. குருநாதன், திரு. சு. | பாளையங்கோட்டை. |
| 74. குருமூர்த்தி, திரு. ஜ. ஜி. | பவானி. |
| 75. கோதண்டம், திரு. ஏ. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 76. கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 77. கோவிந்தசாமி, திரு. சி. | திருப்பூர். |
| 78. கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம். |
| 79. கோவிந்தராஜன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 80. கோவிந்தன், திரு. வெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| **'ச'** | |
| 81. சண்முகம், திரு. சி. | ஆலந்தூர். |
| 82. சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 83. சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 84. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர். |
| 85. சம்பத், திரு. ஏ. ஜி. | முகையூர். |
| 86. சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர். |
| 87. சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 88. சாந்தகுமாரி, டாக்டர் த. | தாராபுரம் (செ.வ.). |
| 89. சாமிநாதன், திரு. இரா. | திருமங்கலம். |
| 90. சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி. |
| 91. சிவசுப்பிரமணியன், திரு. சா. | ஆண்டிமடம். |
| 92. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி. |
| 93. சின்னக்குழந்தை, திரு. மு. | பெரணமல்லூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ச'—தொடர்ச்சி.** | |
| 94. சிவலோகம், திரு. எஸ். | புவனகிரி. |
| 95. சின்னசாமி, திரு. கே. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 96. சின்னசாமி, திரு. ரா. | தர்மபுரி. |
| 97. சின்னசாமி, திரு. வி. கே. | பவானிசாகர். |
| 98. சீரங்கன், திரு. எம். | மேட்டூர். |
| 99. சீனிவாசன், திரு. பெ. | சிவகாசி. |
| 100. சுந்தர், திரு. கே. | உத்திரமேரூர். |
| 101. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 102. சுந்தரம், திரு. க. | பொன்னேரி (செ.வ.). |
| 103. சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம். |
| 104. சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 105. சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.). |
| 106. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி. |
| 107. சுப்பிரமணியம், திரு. தா. க. | சத்தியமங்கலம். |
| 108. சுப்பிரமணியன், திரு. அ. லெ. | திருநெல்வேலி. |
| 109. சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை. |
| 110. சுப்பு, திரு. ஏ. | ராசிபுரம். |
| 111. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி. | ஈரோடு. |
| 112. சுப்பையா, திரு. ஆலவயல். | திருமயம். |
| 113. செங்குட்டுவன், திரு. ஏ. | மயிலாடுதுறை. |
| 114. செங்கைசிவம், திரு. | பெரம்பூர் (செ.வ.). |
| 115. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிப்பாளையம். |
| 116. சேட்டு, திரு. எம். | செங்கம் (செ.வ.) |
| 117. சொக்கர், திரு. ரா. | விருதுநகர். |
| 118. சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ட'** | |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| **'த'** | |
| 120. தங்கபாண்டியன், திரு. வே. | அருப்புக்கோட்டை. |
| 121. தங்கம், திரு. அ. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 122. தங்கராஜன், திரு. எஸ். ஏ. | திண்டுக்கல். |
| 123. தங்கராஜு, திரு. ஏ. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| 124. தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 125. தங்கவேல், திரு. என். | குன்னூர் (செ.வ.). |
| 126. தங்கவேலு, திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.). |
| 127. தம்புசாமி, திரு. வி. | திருவாரூர் (செ.வ.) |
| 128. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | இளையான்குடி. |
| 129. தமிழ்மணி, திரு. வீ. | செங்கல்பட்டு. |
| 130. தயாளன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 131. தனபாலன், திரு. கே. ஆர். ஜி. | சேலம்-1. |
| 132. தனராஜ், டாக்டர் வி. | வந்தவாசி (செ.வ.) |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134. திருமூர்த்தி, டாக்டர் து. | திருப்போரூர் (செ.வ.). |
| 135. திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 136. துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு. |
| 137. துரைசாமி, திரு. வீ. பெ. | நாமக்கல் (செ.வ.). |
| 138. துரைபாண்டியன், டாக்டர் பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 139. துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 140. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 141. தென்னரசு, திரு. எஸ்.எஸ். | திருப்பத்தூர். |
| 142. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ந'** | |
| 143. நஞ்சப்பன், திரு. ந. | பெண்ணாகரம். |
| 144. நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 145. நடராசன், திரு. பொ. | திருத்தணி. |
| 146. நடேசன், திரு. எகால் மு. | ரிஷிவந்தியம். |
| 147. நடேசன், திரு. ஆர். | திருவட்டாறு. |
| 148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி. |
| 149. நாராயணன், திரு. ராம. | காரைக்குடி. |
| 150. நூர்முகமது, திரு. செ. | பத்மநாபபுரம். |
| 151. நேரு, திரு. கே. என். | லால்குடி. |
| **'ப'** | |
| 152. பஞ்சாட்சரம், திரு. ஆர். | மேல்மலையனூர். |
| 153. பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர். |
| 154. பழனிச்சாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 155. பழனிசுவாமி, திரு. க. | எடப்பாடி. |
| 156. பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.). |
| 157. பன்னீர்செல்வம், டாக்டர் மா. | சீர்காழி (செ.வ.). |
| 158. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 159. பாப்பா உமாநாத், திருமதி. | திருவரம்பூர். |
| 160. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 161. பால்ராஜ், திரு. சோ. | மதுரை-மத்திய. |
| 162. பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர். |
| 163. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 164. பாலையா, திரு. ஆ. | கொளச்சல். |
| 165. பிச்சாண்டி, திரு. கே. | திருவண்ணாமலை. |
| 166. பிச்சைமுத்து, திரு. ரெ. | பெரம்பலூர் (செ.வ.). |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி. |
| 168. புகழேந்தி, திரு. இ. | கடலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ப'—தொடர்ச்சி** | |
| 169. பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம். |
| 170. பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி. |
| 171. பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர். |
| 172. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.). |
| 173. பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை. |
| 174. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு. |
| 176. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம். |
| 177. பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு. |
| 178. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி. |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி. |
| **'ம'** | |
| 181. மகேந்திரன், திரு. ஆர். | நாட்றாம்பள்ளி. |
| 182. மணி, திரு. ஆச்சியூர், எம். | நாங்குநேரி. |
| 183. மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை. |
| 184. மணி, திரு. கோ. சி. | கும்பகோணம். |
| 185. மணிமாறன், திரு. மா. | நன்னிலம், (செ.வ.). |
| 186. மதிவாணன், திரு. இரா. | இராயபுரம். |
| 187. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189. மனோகரன், திரு. பா. | சிவகங்கை. |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி.ரா. | திண்டிவனம். |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192. மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு. |
| 193. மாரப்பன், திரு. பி. | காங்கேயம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ம'—தொடர்ச்சி** | |
| 194. மாரிமுத்து, திரு. அ. | வானூர் (செ.வ.). |
| 195. முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196. முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 197. முத்தையன், திரு. எம். | சங்கராபுரம். |
| 198. முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 199. முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம். |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர். |
| 201. முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |
| 202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203. மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204. மூக்கையா, திரு. எல். | பெரியகுளம். |
| 205. மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர். |
| 206. மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில். |
| **'ய'** | |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி. | வலங்கைமான் (செ.வ.) |
| **'ர'** | |
| 208. ரமணி, திரு. கே. | கோவை (கிழக்கு). |
| 209. ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம். |
| 210. ரவி அருணன், திரு. கே. | அம்பாசமுத்திரம் |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஒசூர். |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. | மன்னார்குடி. |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. | திருப்பரங்குன்றம். |
| 214. ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப. | அரவக்குறிச்சி. |
| 215. ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம். |
| 216. ராஜு, திரு. எச். எம். | உதகமண்டலம். |
| 217. ராஜேந்திரன், திரு. எம். எஸ்.கே. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **'ல'** | |
| 218 லட்சுமி, திருமதி பி. | வால்பாறை (செ.வ.) |
| **'வ'** | |
| 219. வரதராஜன், திரு. ஆர். | சங்கரி (செ.வ.). |
| 220. வரதராசன், திரு. உ.ரா. | வில்லிவாக்கம். |
| 221. வல்லரசு, திரு. பி. என். | உசிலம்பட்டி. |
| 222. விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223. விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224. வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம். |
| 225. வீரையன், திரு. கோ. | நாகப்பட்டினம். |
| 226. வெங்கடாசலம், திரு. பெ. | வீரபாண்டி. |
| 227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம். |
| 228. வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. | தொண்டாமுத்தூர். |
| 229. வேணு, திரு. கி. | கும்மிடிப்பூண்டி. |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம். |
| **'ஸ'** | |
| 231. ஸ்டாலின், திரு. மு. க. | ஆயிரம் விளக்கு. |
| **'ஜ'** | |
| 232. ஜெயலலிதா, செல்வி ஜெ. | போடிநாயக்கனூர். |
| **'ஹ'** | |
| 233. ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி. |
| **'ஸ்ரீ'** | |
| 234. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். | சைதாப்பேட்டை. |
| 235. ஆஸ்கார் சி. நிக்லி, திரு. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| | |
|---|---|
| **திரு. கு. அழகிரிசாமி** | **தலைமை வழக்கறிஞர்.** |

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை**

**ஆவணி 4, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு-2021**

**1990, ஆகஸ்ட் 20, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*''எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உட்பகை உள்ளதாம் கேடு.''*

*எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு உடையதே ஆயினும் ஒரு குடியை அழிக்கவல்ல கேடு உட்பகையில் உள்ளதாகும்.*

### 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்தமை அறிந்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் :*

*(1) திரு. எம். காட்டி முத்து—மறைந்த நாள் 22–4–1990 தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் தனித் தொகுதி—1952 முதல் 1957 வரை உறுப்பினர்.*

*(2) திரு. கு. காமாட்சி—மறைந்த நாள் 21–6–1990—திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் தொகுதி—1971 முதல் 1976 வரை உறுப்பினர்.*

*(3) திரு. கே. கோபால் கவுண்டர்—மறைந்த நாள் 23–6–1990, தென்னாற்காடு மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி—1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை உறுப்பினர்.*

*(4) திரு. என். மருதாசலம்—மறைந்த நாள் 23–6–1990, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்-2 தனித் தொகுதி, 1957 முதல் 1962 வரை மற்றும் பேரூர் தனித் தொகுதி, 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை உறுப்பினர்.*

[1990 ஆகஸ்ட் 20

(5) திரு. ஜே. மாதா கவுடர்—மறைந்த நாள் 12–8–1990 —நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை உறுப்பினர்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை, இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா நேரம். வினா எண். 1,

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, இன்றைக்குச் சட்டமன்றம்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கவனிக்க வேண்டும். வினா நேரத்தின்போது வேறு எந்த வகையான விவாதத்திற்கும் இடமில்லை. உங்களுக்கு ஏதாவது பேச வேண்டுமென்று தேவைப்பட்டால், 'நேரமில்லா நேரம்' என்ற பகுதியில்தான் பேச அனுமதி வழங்கப்படும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன்னால், உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான் சட்டமன்றத்திற்கான சட்ட விதிகள் ஒழுங்காகச் செயல்படுகிறதா......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிகள் செயல்படுகிறதா இல்லையா என்பதை ஆராய்வதற்கு உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அது 11 மணிக்குப் பிறகு, சட்டப்படி, மரபுப்படி. முதலில் நீங்கள் இதைச் சரியாகச் செயல்படுத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு).



**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வினா நேரத்தில் வேறு எதுவும் கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள். நான் இதுவரை நான்கு முறை இங்கு இருந்திருக்கிறேன். 5 முறை உறுப்பினர்களாக இருந்த தலைவர்களும் இருக்கிறார்கள். (குறுக்கீடு) 10 மணிக்குச் சட்டமன்றம் தொடங்குவதாக அறிவித்தீர்களானால் அன்று கேள்வி நேரம் இல்லாதிருப்பது என்ற ஒரு மரபு உண்டு. இதுவரை வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அதிலே உங்களுடைய விருப்பத்தின்படி கேள்வியை வைத்துக் கொள்ளலாம் என்றும் விதி 32-லே இருக்கிறது. எனவே, இவ்வளவு நாளும் இல்லாமல் இன்று கேள்வியை, 'வினா-விடையை' வைப்பதற்கு ஏதாவது சிறப்புக் காரணங்கள் இருக்கக்கூடுமோ என்ற ஐயப்பாட்டின் அடிப்படையிலே, ஏற்கனவே சென்று கொண்டிருந்த பாதையிலிருந்து சற்று விதி இருந்தாலும், தங்களுக்கு விருப்பப்படி அதை நடத்தலாம் என்று சொல்கிற உரிமை இருந்தாலும் கூட, இதற்கு ஏதாவது சிறப்புக் காரணங்கள் இருக்கக்கூடுமோ— இன்றைய சூழ்நிலையிலே அதற்குச் சிறப்புக் காரணம் இருக்கக்கூடுமோ என்று நான் அறிய விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்ன என்று நமது அவைத் தலைவர் விளக்கினால் மகிழ்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்பதுதான் சிறப்புக் காரணம். வேறு சிறப்புக் காரணம் எதுவும் இல்லை. உங்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் இது போடப்பட்டிருக்கிறது விதிகளின்படி.

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவரவர்களே, நமது சட்டமன்றம்.. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரை ராமசாமி, நீங்கள் ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள் ? உட்காருங்கள்.

**திரு. துரை ராமசாமி :** எனக்கு உரிய சீட், இடம் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு உரிய இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உங்களுடைய பட்டியலைப் படித்துப் பாருங்கள் தெரியும்.

10-05 மணி

**திரு. எஸ். ஆர். இராதா :** பட்டியலிலிருந்து நீக்கப்பெற்ற திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஆகியவர்களை எங்களோடு நீங்கள் உட்கார வைத்திருக்கக் கூடாது ...

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் கவனிக்க வேண்டும். இப்போது வினா நேரத்தில் நீங்கள் குறுக்கிடுவீர்களேயானால், இதற்கு எந்தவித விடையும் வராது. நீங்கள் இப்போது உட்கார்ந்து, அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தால்தான்....(குறுக்கீடுகள்) திரு. உகம்சந்த், நீங்களும் உட்கார வேண்டும்; திரு. அண்ணா நம்பி, திரு. துரை ராமசாமி, எல்லோருமே உட்கார வேண்டும். நீங்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்தால் நான் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் கடுமையாக இருப்பீர்கள் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் எதிர்பார்ப்பது ஒன்றும் இல்லை. இதுதான் இயல்பு. தேவைப்படுகிறபோது கடுமையாகவும், தேவைப்படுகிறபோது மென்மையாகவும் நடப்பதுதான் என்னுடைய இயல்பு. நீங்கள் இதை எப்படி எதிர்பார்க்கிறீர்கள் ?

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே சொல்லி விட்டீர்களே, அது இயல்பு என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. தேவைப்படுகிற போது கடுமையாக இருப்பேன். நீங்கள் முறைக்கு மாறாக நடந்தால், நான் தடவிக் கொடுக்க மாட்டேன். இதை நீங்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். ஆர். இராதா : எங்களுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது என்பதை இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் உட்கார முடியுமா ? முடியாதா ?

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து நீங்கள் இதற்கு விளக்கம் சொல்லியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரம் முடிந்து 11 மணிக்குத்தான், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இப்போது யாரும் எந்த விதிகளின்படியும், எந்தப் பிரச்சினையும் எழுப்ப முடியாது. எழுப்புவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.





திரு. எஸ். ஆர். இராதா : தாங்கள் ஒருமணி நேரத்தை — இந்த வினா நேரத்தை அனுமதித்தால், நீங்கள் சட்டப்படி இந்த அவை நடவடிக்கை நடத்தி, அவர்களை எங்களுடைய கட்சியிடம் சேர்த்து. (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காக நீங்கள் இங்கே வந்து முறைகேடாகக் குறுக்கிடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. எஸ். ஆர். இராதா : முறைதவறி நான் நடக்க மாட்டேன். முறையோடுதான் நடப்பேன். இப்போது முறையோடுதான் பேசுகிறேன். நாங்கள் பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது என்னிடமிருந்து வேறு எந்த விடையும் வராது. நீங்கள் முறைகளுக்கு மாறாக நடந்தால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவுசெய்து நான் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதை நான் அனுமதிக்க மாட்டேன். மீண்டும் ஒருமுறை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்து அவை நடவடிக்கைக்கு ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து எங்களுக்குப் பேச அனுமதி கொடுங்கள். அவை நடவடிக்கைக்கு ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் அவை நடவடிக்கை. இன்றைக்குப் போட்ட நிகழ்ச்சி நிரல்படி, முறைப்படி அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பது தான் அவை நடவடிக்கை. வினா விடை நிகழ்ச்சியை நடத்த ஒத்துழைப்புக் கொடுப்பதுதான் அவை நடவடிக்கை. நீங்கள் நினைத்த நேரத்திற்கெல்லாம் எழுந்து பேசுவது அவை நடவடிக்கை இல்லை.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : எங்களுடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. அவைத் தலைவர் அவர்களே ....(குறுக்கீடுகள்.)

[1990 ஆகஸ்ட் 20

திரு. எஸ். ஆர். இராதா : இன்றைக்குதான் அவை தொடங்குகிறது. நாங்கள் கட்சியிலிருந்து நீக்கியவர்களை, எங்கள் கட்சியிலே சேர்த்துக் கொள்வதில் தயவுசெய்து தலைவர் அவர்கள் ஈடுபடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் உட்கார வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். திருநாவுக்கரசு : எங்களுடைய இருக்கைகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் மூன்று பேருமே உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்.) நீங்கள் உட்காரா விட்டால், நான் வெளியேற்ற வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இதில் குறுக்கிடவே கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் எங்களது உரிமையைப் பறித்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்.)

திரு. எஸ். திருநாவுக்கரசு : கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றையெல்லாம் பிறகு பேசுவோம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : நீங்கள் எப்படி எங்கள் இடத்தை மாற்றினீர்கள் ? (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருமே உட்கார வேண்டும். உட்காரவில்லையென்றால் வெளியேற்ற வேண்டியிருக்கும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : 'சீட்டை' மாற்றினால் எப்படி உட்காருவோம் ? 'ஹை-கோர்ட்டிலே' . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் 'Zero Hour'ல் பேசிக் கொள்ளலாம். இப்போது வினா நேரத்தை நடத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : 'ரூலிங்ஸ்' பிரகாரம் . . . (குறுக் கீடுகள்.)



1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். இப்போது வினா நேரம் நடக்கும். வேறு எந்தவிதமான இடையூறுக்கும், குந்தகத்திற்கும் இடம் அளிக்கப்பட மாட்டாது.

திரு. எஸ். ஆர். இராதா : கட்சியிலிருந்து நீக்கப்பட்ட வர்களை . . . (குறுக்கீடுகள்).

திரு. எஸ். டி. உகமசந்த் : கட்சியிலிருந்து எங்களை நீக்கு வதற்கு என்ன அதிகாரம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் எல்லோரும் உட்கார முடியுமா ? முடியாதா ? ஒருமுறை வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக் கீடுகள்.) இரண்டாம் முறை வேண்டுகிறேன். நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்.) மூன்றாம் முறை வேண்டு கிறேன், நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடு கள்.) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்.)

10-10 மணி

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : ஜெய லலிதாவை நாங்கள் நீக்கியிருக்கிறோம். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களை வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்.) எல்லோரும் உட்கார வேண்டும். உட்காரவில்லையென்றால், எல்லோரையும் வெளி யேற்ற வேண்டி இருக்கும். (குறுக்கீடுகள்.) திரு. செங்கோட்டை யன் அவர்கள் இடத்தில் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்.) உட்காராவிட்டால், இடத்தை விட்டு வெளியேறுமாறு கட்டளை யிடுகிறேன். உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் இடத்தில் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்.) உட்காரவில்லையென்றால் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, என்னுடைய இடத்தை மாற்றியிருக்கிறீர்கள். என்னுடைய இடம் அங்கே. அங்கே போய் நான் உட்காரலாமா ? நாங்கள் எங்கள் இடத்தில் உட்காருவதற்கு . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு இடத்தில் உட்காராவிட்டால், வெளி யேறுமாறு கட்டளையிடுகிறேன் (குறுக்கீடுகள்.) திரு. துரை ராமசாமி இடத்தில் உட்கார வேண்டும். உட்காரவில்லையென் றால் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்.)

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் இடத்தில் உட்கார வேண்டும். உட்காரவில்லையென்றால் வெளியேறுமாறு கட்டளை யிடுகிறேன். (குறுக்கீடுகள்.) திரு. அண்ணா நம்பி இடத்தில் உட்கார வேண்டும். இல்லையென்றால் வெளியேறுமாறு கட்டளை யிடுகிறேன். (குறுக்கீடுகள்.) திரு. உகம்சந்த் இடத்தில் உட்கார வேண்டும். உட்காரவில்லையென்றால், அவர் வெளியேற வேண்டும். (குறுக்கீடுகள்). திரு. வெ. இராசு, உட்கார வேண்டும். இல்லையென்றால் வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்). திருமதி லட்சுமி இடத்தில் உட்கார வேண்டும். திரு. சொ. மாதப்பன் இடத்தில் உட்கார வேண்டும். திரு. மூக்கன் இடத்தில் உட்கார வேண்டும். இல்லாவிட்டால் வெளியேறுமாறு அவர்களுக்குக் கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்.) Marshal இந்த உறுப்பினர்களை வெளியேற்றலாம்.

(பேரவைக் காவலர்களால் அவ்வுறுப்பினர்கள் வெளியேற்றப் பட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் யாவரும் இன்று முழுவதும் அவைக்கு வர இயலாது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்கார வேண்டும். இப்போது Point of Order -- க்கோ வேறு எந்த விளக்கத்திற்கோ இடம் இல்லை. 11 மணிக்குப் பேசலாம். (குறுக்கீடுகள்) வினா எண். 1 — திரு. என். பழனிவேல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, இடம் மாற்றிய உங்களுடைய அறிவிப்பு.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரையுமே இப்போது அனுமதிக்க முடியாது. எந்த விளக்கமும் 11 மணிக்குப் பேசுவோம்.

திரு. குமரி அனந்தன் : உங்களுடைய அறிவிப்பில் இட மாற்றம் செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிக்க வேண்டுமென்கிற தேவை கிடையாது. விதி 6-ன்படி எந்த வகையாகவும் அறிவிக்க வேண்டும் என்று கிடையாது. எது வேண்டுமானாலும், 11 மணிக்குப் பேசலாம், இப்போது கிடையாது. (குறுக்கீடு). திரு. குமரி அனந்தன் இப்போது உட்கார்ந்தால், 11 மணிக்குப் பேசலாம். உங்களுக்கு மரபுகள் தெரியும். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களது பதில். வினா எண்: 1.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே......

திரு. குமரி அனந்தன் : வினாவுக்குப் பதில் சொல்கிறார்களா? (குறுக்கீடு) தயவு செய்து....

10-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன், உட்கார வேண்டும். (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : விளக்கம் நீங்கள் தராமல் நாங்கள் உட்காருவது சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இது தொடர் பாகப் பேசுவதற்கு இப்போது இடமில்லை. இது வினா நேரம். எல்லோருக்கும் விதித்த ஒரு விதிமுறைதான் (குறுக்கீடு) பேசுவோம். 11 மணிக்குப் பேசுவோம். இதற்கு நேரம் இருக்கிறது. நாம் இருந்து கேட்போம். அதில் ஒன்றும் பிரச்சினையே கிடையாது (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : இதற்கு விளக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு விளக்கம் தர வேண்டுமென்ற தேவை கிடையாது. இப்போது நீங்கள் உட்கார வேண்டும் .... (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : இடம் மாற்றியிருப்பது பற்றி...—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் இடம் மாற வில்லை. நீங்கள் உட்காருங்கள். உங்கள் இடம் மாறாது. தேவைப்படும்போதுதான் அது மாறும். இப்போது நீங்கள் உட்காருங்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாறாது என்று எப்படிச் சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மாற்றியிருந் தால்தான் உங்களுக்குப் பிரச்சினை. திரு குமரி அனந்தன் உட்கார வேண்டும். நீங்கள் மரபு தெரிந்தவர். பண்பாடு மிக்கவர். எதை மதிக்க வேண்டுமோ, அதை மதிக்க வேண்டுமென்று தெரிந்தவர். அமர வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : இதை எதிர்த்து நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

[1990 ஆகஸ்ட் 20

### மாநில அரசின் கீழ் இயங்கும் மொத்த துறைகள்

*693. திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில அரசின் கீழ் இயங்கும் மொத்தத் துறைகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் பணிபுரியும் பணியாளர்களில் பெண்கள் விகிதாச்சாரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மொத்தத் துறைகள்—154.

(ஆ) அவைகளில் பணிபுரியும் பெண்கள் விகிதாசாரம் 22.04 ஆகும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் கீழ் இயங்கும் மொத்தத் துறைகள் 154 என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்டு, அதிலே 22.04 விகிதாச்சாரம் மட்டும் பெண்கள் பணிபுரிவதாக இங்கே சொன்னார்கள். ஒவ்வொரு துறையிலும் எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 154 துறைகளையும் பட்டியல் போட்டுச் சொல்வதற்கு இப்போது இயலாது. இருந்தாலும், சில குறிப்பிட்ட துறைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். சமூக நலத் துறையில் பெண்கள் 70 சதவிகிதம்; முறைசாரா மற்றும் முதியோர் கல்வித் துறையில் 64.72 சதவிகிதம் ; பொது சுகாதாரத் துறையில் 48.87 சதவிகிதம் ; மருத்துவக் கல்வித் துறையில் 40 சதவிகிதம் ; அரசுத் தேர்வுகள் துறையில் 34 சதவிகிதம். குறிப்பாக, ஆசிரியர் பணி, பொது சுகாதாரப் பணிகளில் மகளிர், அதிகமாகப் பணிபுரிகிறார்கள். இந்த அரசினுடைய குறிக்கோளான 30 சதவிகிதம் பெண்கள் அரசுப் பணிகளிலே ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை நிறைவேற்ற விரைந்தும், வேகமாகவும் இன்றைக்கு அரசு செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலே, 1989–90—இந்த ஆண்டில் 30 சதவிகிதம் பெண்களுக்கு அளிக்கப்படுமென்று அறிவித்த பிறகு, அரசுப் பணிக்காக எடுக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கையில் மொத்தப் பேர்கள் 1,577 பேர். அதில் மகளிர் மாத்திரம் 1,048 பேர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில துறைகளில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட சதவிகிதத்தினராகப் பெண்கள் பணிபுரிகிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இதிலே அதிகாரிகளாக இருக்கக் கூடியவர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள் ? அதோடு, இன்றைக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக் கூடிய தமிழ்நாடு தேர்வாணைக் குழு மெம்பர்களில் பெண்கள் யாரும் இல்லையென்று கருதுகிறேன். பெண்களை, தேர்வாணைக் குழு உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மொத்தத் துறைகளைப் பற்றியும், அதிலே பணிபுரியும் பெண்களின் விழுக்காடு பற்றியும்தான் அமைந்திருக்கிறது. அதனுடைய பட்டியலைப் பற்றிக் கேட்டிருந்தால், முழு விவரமும் இந்த அவைக்குப் பட்டியலாக—தயாராக வைக்கப் பட்டிருக்கும். கேட்காததால் அந்தப் பட்டியல் வைக்கப்பட வில்லை. இருந்தபோதிலும், இந்த 30 விழுக்காட்டை அடைவதற்கான அந்தக் குறிக்கோளை எய்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. தேர்வாணைக் குழு பற்றிக் குறிப்பிட்டார்கள். அதையும் அரசு உரிய நேரத்தில் பரிசீலிக்கும்.

10-20 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சி அமைந்தபிறகு எல்லாத் துறைகளிலும் அதாவது கல்வி, வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீத இடம் ஒதுக்கவேண்டும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்குப் பிறகு இதனால் எந்தெந்த துறைகளில் எவ்வளவு பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். 30 சதவீதம் இடம் வழங்கப்படும் என்ற அறிவிப்புக்குப் பிறகு அரசுப் பணிகளுக்கு எடுக்கப்பட்டவர்கள் 1,577 பேர். இதிலே பெண்கள் மாத்திரம் 1,048 பேர் என்று அறிவித்திருக்கிறேன். அது மாத்திரமல்லாமல் மூன்றாம் வகுப்புவரை ஆசிரியப் பணிகளில் பெண்கள்தான் நியமிக்கப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து அவ்வாறே செயல்பட்டு வருகிறது. அது தவிர மேலும் இந்தக் கல்வியாண்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை நியமிக்கும்போது மொத்த காலியிடங்களில் 50 சதவீதம் பெண் ஆசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[1990 ஆகஸ்ட் 20

**திருமதி பாப்பா உமாநாத் :** மதிப்பிற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறையில் 70 சதவீதம், முறைசாராக் கல்வி என்பதில் 64 சதவீதம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப் பார்ப்பதற்கு பெருமையாக இருக்கிறது. ஆனால் இதிலே வேலை செய்யக்கூடியவர்கள் மிக சொற்ப ஊதியத்தோடு சத்துணவு மற்றும் கிராம நல அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டு அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கும் கொஞ்சம் கூடுதலாக ஊதியம் கொடுத்து நல்ல முறையில் அவர்கள் செயல்பட உதவுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, நிதியாதாரம், நிலையாதாரம் இவைகளைக் கணக்கில் கொண்டுதான் அதைப்பற்றி யோசிக்கவேண்டும்.

**திரு. வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறிவித்துள்ளபடி 30 சதவீதம் இட ஒதுக்கீடு பெண்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று ஆணையிருந்தாலும் கூட நிறுவனங்களில் இருந்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிடத்தில் பட்டியல் கேட்கும்போது அவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில்தான் பட்டியல் அனுப்புகிறார்கள். அப்படி சீனியாரிட்டி அடிப்படையில் அனுப்பப்படுகிற பட்டியலில் பெண்கள் இல்லாவிட்டால் அங்கே வந்திருப்பவர்களைத்தான் நிறுவனங்கள் தேர்வு செய்யவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆகவே நிறுவனங்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கேட்கும்போதே 30 சதவீதம் பெண்களை அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால் வாய்ப்பாக இருக்கும். எனவே அரசு நிறுவனங்களில் பிராக்டிகல் டிஃபிக்கல்ட்டீஸ் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு யோசிக்கும்.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் வேலைவாய்ப்பு, முன்னேற்றம் தொடர்புடைய இன்னொரு கேள்விக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெற விரும்புகிறேன். இது தொடர்பாக மத்திய அரசு ஒரு தேசிய கமிஷன் அதாவது 'நேஷனல் கமிஷன் ஃபார் வுமன்' என்று அமைத்து இருக்கிறது. ஆறு மாநிலங்களில் அப்படிப்பட்ட கமிஷன் அமைப்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதாக பத்திரிகைச் செய்திகள் வந்திருக்கின்றன. தமிழ்நாட்டிலேயும் பெண்கள் முன்னேற்றம், வேலைவாய்ப்பு இவை பற்றி விரிவாக ஆராய்வதற்கு மாநில அளவில் பெண்களுக்கான கமிஷன் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் பெண்களுக்கான இந்தக் கமிஷன் அமைப்பதற்கு முன்பே தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையிலே பெண்களுக்கு 30 சதவீதம் தரவேண்டும் என்று சொல்லியிருந்ததை இந்த அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டது. ஏனென்றால் தேசிய முன்னணி அரசு கடந்த 5, 6 மாதங்களுக்கு முன்புதான் பொறுப்புக்கு வந்தது. தேசிய முன்னணியிலே அங்கம் வகிக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால் தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையில் உள்ள பெண்களுக்கு 30 விழுக்காடு என்பதை, தொடர்ந்து, கடந்த காலத்திலே இருந்து—ஓராண்டு காலத்திற்கு மேலாக அமல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, மாநில அளவிலே இந்தக் கமிஷன் அமைப்பதைப் பற்றி, மத்தியிலே இந்தக் கமிஷன் அமைந்ததையொட்டி யோசிக்கப்படும்.

### வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாகப் பாதுகாப்புப் படை அமைத்தல்

*** 6632. திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வி. ஐ. பி-க்களின் பாதுகாப்பிற்காக தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே,

வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் இல்லை.

### விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி

*** 8141. டாக்டர் து. திருமூர்த்தி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசினர் தரப்பில் கோவளம் அருகில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

[1990 ஆகஸ்ட் 20

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவளம் என்பது செங்கை அண்ணா மாவட்டத்தில் இரண்டாவது சுற்றுலா மையமாக அமைந்திருக்கிறது. பரந்த மணற்பரப்பும், அதற்கடுத்தாற்போல் படகுக்குழாமும் இருக்கின்ற காரணத்தால் இதைக் கருத்தில் கொண்டு மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, கோவளத்தில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பது பற்றியதாகும். அந்த இடம் நல்ல, சுற்றுப் பயணத்திற்கேற்ற இடமாக இருப்பதால் அந்த நோக்கத்தில் அந்த இடத்தைப் பயன்படுத்தலாம்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த செல்வராஜ் ராபர்ட் 100 மீட்டர், ஏஞ்சலின் — ஹை ஜம்ப், நிஜாமுதீன்— டிரிபிள் ஜம்ப் போன்ற விளையாட்டுகளில் ஏஷியன் அளவிலே முதல் இடத்தில் வந்துள்ளார்கள். மேலும் சிறந்த விளையாட்டு வீரர்களை மேலும் சிறந்தவர்களாக ஆக்குவதற்கு கேரளா, கர்நாடகா போன்ற பல்வேறு மாநிலங்களில் இன்டர் நேஷனல் அளவிலே விளையாட்டுத் திடல்களை அமைத்திருக்கின்றன. அதுபோன்று தமிழகத்திலும் அமைக்கிற நோக்கம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்கும், மிகப் பெரிய பாராட்டுக்குரிய வீரக்களுக்கு தனி ஆதரவு வழங்குவதற்கும் தனித்தனியாக விளையாட்டுத் துறையால், அவை பரிசீலிக்கப்படும். அப்படிப்பட்டவர்கள் விரும்பக்கூடிய தனி ஆதரவை அல்லது தனிப் பயிற்சியைத் தேவைக்கேற்பப் பெறுவதற்கு அவர்கள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது B.Sc (Physical Education and Health) என்று ஒரு Course ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டே இரண்டு கல்லூரிகள், அதாவது நெல்லையிலே ஒரு கல்லூரிக்கும் சிவகாசியில் ஒரு கல்லூரிக்கும் தரப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசுதான் பணம் தருகிறது. பல கல்லூரிகளும் தங்களுக்கு இந்தப் படிப்பு வகுப்புகள் வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்கின்ற கல்லூரிகளுக்கு, விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கின்ற வகையில், அதைத் துவங்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு அப்படிப்பட்ட உடற்பயிற்சிக் கல்வியையும் கலைக் கல்லூரிகளில் நடத்துவதை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடத்திலே உரிய விண்ணப்பம் கொடுத்து அதை ஏற்றுக் கொண்டுள்ள அளவிற்கு நான்கைந்து இடங்களில் ஆரம்பிப்பதற்கு மாநில அரசு ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக்கின்றது. பல்கலைக் கழக மானியக் குழு நிதி வழங்குகின்ற அளவுக்கு, அது உறுதியாகிற அளவுக்கு அந்த வகுப்புகள் அதற்குரிய அந்தக் கல்லூரிகளில் தொடங்கப்படும்.

தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியம்

*8196 திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் அவர் மரணத்திற்குப் பின் அவரது மனைவிக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எம். முத்தையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்கு இதுவரை எத்தனை பேருக்குப் பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது ?

[1990 ஆகஸ்ட் 20

இன்னும் எத்தனை பேருக்கு வழங்கப்பட இருக்கிறது? அந்த விதத்திலே இந்த ஆண்டிலே அவை பூர்த்தியாகிவிட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக் காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவித் தொகை கடந்த ஆண்டில் ரூ. 250-லிருந்து ரூ. 350-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே வழங்கப்பட்ட சிலருக்கு இடைக்காலத்தில் வழங்கப்படாத ஒரு நிலை இருந்தது. அவையும் பரிசீலிக்கப்பட்டு இந்த ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் ஏறத்தாழ 1,500 பேருக்கு வழங்கப்படுகிறது. மேலும் வேண்டுகோள்கள் வரும்போது அவ்வப்போது பரிசீலிக்கப்படக் கூடிய நிலையில்தான் அவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**திரு. அ. பலராமன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற சிலருக்கு சிறைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுவதோடு, சிறைச் சான்றிதழ்களைச் சிறைகளில் கறையான்கள் அழித்துவிட்டதால், அவைகளைத் தர இயலாத நிலை இருக்கிறது என்று எழுத்து மூலமாகத் தந்திருக்கிறார்களே, அதுபோன்ற நிலையை மாற்றி, உண்மையிலேயே சிறை சென்று மீண்ட மொழிப் போர் வீரர்களுக்குச் சான்றிதழ் அளிக்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறை சென்றதற்கான சான்றிதழ், சிறை அதிகாரிகளால் வழங்கப்பட முடியாத நிலை இருக்குமேயானால், ஏற்கெனவே சிறை சென்றதற்கான சான்றிதழ் பெற்றவர்கள், தங்களோடு சிறையில் இருந்ததற்கான சான்றை வழங்குவார்களானால், அந்த அடிப்படையிலும் அது பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிப் போராட்ட வீரர்கள் என்ற பட்டியலை அரசு தயாரித்திருக்கும்போது, அதற்கு என்ன யோக்கியதாம்சத்தை, என்ன அடிப்படையை ஏற்படுத்தியிருக்கிறது? எந்தெந்த ஆண்டில், மொழிப் போராட்டத்தை நடத்தியவர்களுக்கு இந்த மானிய உதவி அளிப்பதாக அரசு அறிவித்திருக்கிறது? அதற்குப் பிறகு, 1965-ஆம் ஆண்டுக்குப் பிறகு, மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் அரசு இந்தப் பட்டியலில் சேர்த்திருக்கிறதா? அப்படி என்றால் அதனுடைய விவரம் என்ன என அறிய விரும்புகிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

10-30 மணி

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழியைப் பாதுகாப்பதற்காக ஏதேனும் ஒரு வகையில் இழப்புக்கோ, தொல்லைக்கோ ஆளானவர்களுக்கும், எல்லைப் போராட்டங்களில் ஈடுபட்டு தொல்லைகளுக்கு ஆளானவர்களுக்கும் மொழி அல்லது அந்த மொழியைச் சார்ந்தவர்களின் உரிமையைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட தொல்லைகளை ஏற்றவர்களுக்கு, எந்த ஆண்டு என்ற வரையறை இல்லாமல், பொதுவாக அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு இந்தச் சட்டம் அனுமதிக்கிறது. ஆனால் விண்ணப்பிக்கும்போது, முன்னுரிமை அடிப்படையில், முதல் காலக் கட்டத்திலேயே சிறை சென்றவர்களுக்கு வழங்கிக் கொண்டு வருகின்ற முறை இருக்கிறது. அண்மைக்காலத்தில் சிறை சென்றவர்களுக்கு அதற்குரிய நிதி வசதி போதுமான அளவு கிடைக்கிறபோது வழங்கப்படும்.

**திரு. க. சோ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியில் மொழிப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற ஏழையெளியவர் பல பேர்களுக்கு இன்னும் இந்த உதவித் தொகை வழங்கப்படாமல் இருக்கிறது. இந்த உதவித் தொகை அவர்களுக்கு எல்லாம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொகுதி என்பதல்ல. என்றைக்கு விண்ணப்பங்கள் வந்தன என்ற அடிப்படையில் அந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட அதற்காக ஒரு குழு இருக்கிறது. கூடுமானவரை தகுந்த சான்றிதழ் உடையவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**திரு. கோ. பூவராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் பல பேருக்கு மானியம் வழங்கப்படவில்லை என்று அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறதா? அவர்களுக்கும் மானியம் வழங்குவதற்கு ஏதாவது அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் வழங்குவதில் கட்சி வேறுபாடு கருதப்பட மாட்டாது. மொழி அடிப்படையில் எந்த வகையிலே அவர்கள் தியாகம் செய்திருந்தாலும் அந்த விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் என்ற முறையில் கால அடிப்படையில் முன்னுரிமை தந்து வழங்கப்படுகிறது.

[1990 ஆகஸ்ட் 20

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்காலம் இந்த மொழிப் போராட்டத்தில், வரலாற்றில் இடம் பெறத்தக்க அளவுக்கு, 8 பேர் தீக்குளித்தார்கள். அந்தத் தியாகிகளுடைய குடும்பங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே உதவி செய்திருக்கிறது. அரசாங்கம் அந்தக் குடும்பங்களுக்குச் சிறப்பாக உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை எல்லாம் பொதுப் பிரச்சினையாகக் கருதப்பட மாட்டாது. தனித் தனியாக அதனுடைய தகுதிக்கேற்ப, நிலைமைக்கேற்ப, சூழலுக்கேற்ப நம்முடைய நிதி வசதிக்கேற்ப பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்று முதல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை எய்திய பலருக்கும் இன்றைக்கு பென்சன் வழங்கப்படுகிறது. ஆனால் அதே காலத்தில் சிறை எய்தி, துன்பம் அனுபவித்த பலர் விண்ணப்பித்தும் கூட, நீண்ட காலமாக அந்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பென்சன் வழங்கப்படவில்லை என்று பல பேர் குறை சொல்கிறார்கள். எனவே, அப்படி பென்சன் வழங்கப்படாமல் இருக்கின்ற விண்ணப்பங்கள் உடனடியாக ஏற்கப்பட்டு, பென்சன் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நேரடியான விவரம் என்னிடத்தில் இல்லையென்று சொன்னாலும் கூட, ஏறக்குறைய 6 திங்களுக்கு முன்னாலே அவர்களில் பெரும்பாலோருக்கு வழங்கப்பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கூட ஓராண்டுக்கு முன்னர் தான் கேள்விப்பட்டதைத்தான் கேள்வியாக எழுப்பியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

### கடலூரிலுள்ள மாவட்ட சிறை

*வினா 8990 திரு. கே. ரமணி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலூரில் உள்ள மாவட்ட சிறையை ''பனிஷ்மெண்ட் சிறை'' என்று அரசு தீர்மானித்துள்ளது உண்மையா ?



1990 ஆகஸ்ட் 20]

(ஆ) ஆம் எனில், அந்தச் சிறைக்கு அனுப்பப்படும் கைதிகள் எப்படிப்பட்ட குற்றங்களுக்காக அனுப்பப்படுகிறார்கள் ?

(இ) எவ்வளவு காலம் அங்கு வைக்கப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறையில் குற்றங்கள் செய்யும் சிறைவாசிகள்; தண்டிக்கப்பட்டும், திருந்தாமல் குற்றங்கள் செய்து வருபவர்கள் ; சிறையில் ஒழுங்கு முறையில்லாதவர்கள் மற்றும் சிறையில் மற்ற சிறைவாசிகளை சிறைக்குற்றம் செய்ய தூண்டுபவர்கள் ஆகியோர் இந்த சிறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

(இ) மூன்று வருடங்கள்.

10 35 மணி

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம் செய்தவர்களை, சிறைக்குள்ளேயே வேறு விதமான ஒரு சிறைக்கு மாற்றம் செய்து, அதன் மூலம் அவர்களைத் திருத்துவதற்கு என்று தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். கடலூர் சிறை என்பது சிறைகளுக்குள்ளேயே விதி முறைகளை மீறி தவறு செய்பவர்களை அனுப்பி வைக்கும் இடமென்று சொன்னால், அங்கே போய்ச் சேர்ந்த பிறகு ஒழுங்கான முறையிலே நடந்து கொள்ளக் கூடியவர்களுடைய பட்டியல் வைக்கப்பட்டு, அவர்கள் அந்தச் சிறையிலே நன்னடத்தையோடு இருக்கிறார்கள் என்றால், அவர்கள் பழைய சிறைக்கு மாற்றப்படுவார்களா ? இந்தக் கேள்வி கேட்க என்ன காரணம் என்றால், அவர்களுடைய சொந்தக்காரர்கள், பந்துக்கள் போன்றவர்கள் நீண்ட தூரப் பயணம் செய்து, அவர்களைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட முறை ஏதாவது அரசு கையாள்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு தலைவரவர்களே, சிறைக் குற்றங்கள் செய்யும் சிறைவாசிகளை தனித்து வைத்து, அவர்கள் தொடர்ந்து 3 வருடங்கள் சிறைக் குற்றங்கள் ஏதும் செய்யாமல் இருந்தால், மறுபடியும் தாய்ச் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். 3 ஆண்டுகள் கடலூர் சிறையில் குற்றங்கள் செய்யாமல் இருந்தால், மறுபடியும் தாய்ச் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். சில சமயங்களில் கோரிக்கைகள் வரும் போது, அதைப் பரிசீலித்துப் பார்த்து, குற்றங்களின் தன்மைகளை அனுசரித்து, கோருகிற சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

[1990 ஆகஸ்ட் 20

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் திருந்துவது என்பதற்கு 3 ஆண்டுகள் என்ற லிமிட் ஏன் என்று புரியவில்லை. சில நேரங்களில் கோப தாபத்தால் திடீரென்று கைதிகளுக்கு இடையிலே ஏற்படும் சில தகராறு களின் காரணமாக சில கைதிகள் தவறு இழைக்கிறார்கள். சில பேர் பலாத்காரமாகக் கூட காரியங்களைச் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கடலூர் சிறைக்கு மாற்றப்பட்ட பிறகு, அவர்களே வருந்தி இந்த நிலை சரியில்லை, இப்படி இருக்கக் கூடாது என்ற நிலைக்கு வரும்போது, 3 ஆண்டுகள் என்ற லிமிட் குறைக்கப்பட்டு, மறுபடியும் அவர்களைப் பற்றி தகுந்த பரிசீலனை செய்ய சிறையில் ஏற்பாடு செய்யப்பட்டு, 3 ஆண்டுகள் அங்கே இருக்க வேண்டுமென்ற நிலை இல்லாமல், அதற்கு முன்னதாகவே கூட அப்படித் திருந்தியவர்களை மாற்ற அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு உத்தரவின்படி இது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது போல சிறைவாசிகள் குற்றங்கள் புரிந்து, பிறகு அவர்களே நல்ல முறையில் நடப்பதாக மீண்டும் உறுதிமொழி கொடுத்தால் அதை அரசு கவனித்து, குறைந்த காலத்தில் அவர்களை மாற்ற வழி வகை செய்யும்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கடலூரில் உள்ள மாவட்டச் சிறையை மேலும் விரிவாக் கவும், பழுதான கட்டிடங்களைப் புதுப்பிக்கவும் ஏதேனும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர் பில்லை. தனியாக கேள்வி போட்டால் விரைம் அளிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவ வர்களே, 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் தேதி போட்ட உள் துறையைச் சேர்ந்த சிறைத் துறையினுடைய உத்தரவு இது. உத்தரவு எண். 1741. சிறையே ஒரு பனிஷ் மெண்ட்தான். அதற்கு மேல் பனிஷ்மெண்ட் என்று சொல்லி, அந்தச் சிறைக்கே ஒரு அவப் பெயர் ஏற்படும் நிலை இருக்கிறது. அரசியல்வாதிகள் கூட அங்கே செல்கிறோம். அங்கே ஆயுள் தண்டனைக்காரர்களை வைத்து, தொலை தூரத்திலிருந்து அவர்களுடைய உறவினர்கள் கூட வந்து பார்க்க முடியாத அளவுக்கு, அந்தச் சிறை இருக்கிறது. எனவே 1985-ல் போடப் பட்ட 1741 எண். உத்தரவை மாற்றி, அவர்களை நல்ல முறையில் நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற கருத்து பரிசீலிக்கப்படும்.

சார் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

*வினா 8313 திரு. வெ. கோவிந்தன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம் பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

10-40 மணி

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம் பட்டு தேர்வு நிலைப் பேரூராட்சியைச் சுற்றி 25 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள மக்கள் பத்திரப் பதிவு செய்ய வேண்டு மானால் 16 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குடியாத்தத்திற்குத் தான் செல்ல வேண்டியுள்ளது. இப்பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையைப் போக்க பேரணாம்பட்டில் இந்த ஆண்டு சார் பதிவாளர் அலுவலகம் திறக்க அரசு உத்தரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த நண்பருக்கு, மாண்புமிகு உறுப்பினருக்கு அந்தப் பேரணாம்பட்டு கிராமம் பற்றி ஒரு சில குறிப்பினை வழங்க விரும்புகிறேன். பேரணாம் பட்டு கிராமம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் குடி யாத்தம் தாலுக்காவைச் சார்ந்தது. இவ்வூரில் சுமார் 15 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். இவ்வூருக்குச் செல்ல போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளன. இவ்வூரைச் சுற்றி வரு வாய்க் கிராமங்கள் அருகருகே கூடுதல் எண்ணிக்கையில் உள் ளன. மேலும் இவ்வூரில் காவல் நிலையம், தபால் நிலையம்,

[1990 ஆகஸ்ட் 20

மாநில அரசு வங்கி, கனரா வங்கி, சென்ட்ரல் வங்கி, பேருந்து நிலையம் ஆகியவை உள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள பேரணாம்பட்டு சார் பதிவாளர் ஆட்சி எல்லையாக குடியாத்தம் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 25 கிராமங்களைப் பிரித்துச் சேர்க்கலாமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்கள் அனைத்தும் தற்போது அவை இணைந்து இருக்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ள தூரத்தை விட பேரணாம்பட்டுக்கு மிக அருகாமையிலேயே உள்ளது.

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் வியாபாரப் பெருங்குடி மக்கள், தோல் தொழிலாளர்கள் ஆகியோர் எல்லாம் இருக்கிறார்கள். அங்கு, குறிப்பாக, பெண்கள் பெயரிலே பத்திரப் பதிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை தனிக் கவனம் செலுத்தி, பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுவதற்கு அரசு உத்திரவு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: தலைவர் அவர்களே, அதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சில செய்திகளைச் சொல்ல விரும்புகிறேன். புதிய சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஆகும் தொடர் செலவு ரூ. 70,258; தொடராச் செலவு ரூ. 40,000. பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டால் ஆண்டு சராசரி வருவாய் 1 கோடியே 90 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் இருக்குமெனக் கருதப்படுவதாலும், கணக்கிடப்படுவதாலும், பேரணாம்பட்டு பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் சார் பதிவாளர் அலுவலகம் துவக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளமையாலும், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டில் சார் பதிவாளர் அலுவலகம் திறக்க ஆணையிடவும், அது செயல்படத் தேவையான பணியிடங்களை வழங்கவும் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படலாம். அத்தோடும் இக்கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு அரசிடமிருந்து 1990-91 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டங்களில் செயல்படுத்தக் கூடிய இனங்கள் குறித்து அறிக்கை கோரும்போது இச் செயற் குறிப்பையும் அத்திட்டத்தில் சேர்த்துப் பரிசீலிக்க அரசுக்கு அனுப்புமாறு பதிவுத் துறைத் தலைவர் கேட்கப்பட்டுள்ளார். ஆனால் இன்றைக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த அளவு நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு திறப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை என்று பதிவுத் துறை தலைவர் தெரிவித்து இருக்கிறார். ஆகையினாலேதான் நிச்சயம் சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்படமாட்டாது என்பதைக் கருத்தில் கொண்டுதான் முதலில் நான் விடை அளிக்கும் போது சொன்னேன், அந்தச் செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்று.



1990 ஆகஸ்ட் 20]

## தருமபுரி மாவட்டத்தின் தலைநகர்

* 9991 டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியை தருமபுரி மாவட்டத்தின் தலைநகராக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா !

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## போக்குவரத்து கழகத்தின் மூலம் நிழற்குடைகள் அமைத்தல்

* 6271 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நிழற்குடைகள் கட்ட மீண்டும் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொதுவாக நிழற்குடைகள் தனியாரால் கடைகள் வைப்பது, கால்நடை கட்டுவது, போன்ற தவறான உபயோகத்திற்குட்படுத்தப்பட்டதால் போக்குவரத்துக் கழகங்கள் நிழற் குடைகள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்தத் தேவையில்லை என்று அறிவுறுத்தப்பட்டன. எனினும் பொது மக்களின் அத்தியாவசியத் தேவையையும் போக்குவாத்துக் கழகங்களின் நிதி நிலையையும், கருத்தில் கொண்டும், மேலும் பொது மக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தாமாகவே கொடுக்கும் நன்கொடையைக் கொண்டும் போக்குவரத்துக் கழகங்கள் நிழற்குடைகள் அமைக்கும் பணியை மேற்கொள்ளலாமென அக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

[1990 ஆகஸ்ட் 20

## பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல்

* 9426 திரு. மு. க. ஸ்டாலின் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைகள் சலுகை விலையில் வழங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ள வாரியத்தின் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள் செலவிற்கென ரூ. 20 இலட்சத்தை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு மானியமாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

10-45 மணி

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்ட அரசு வழங்கியுள்ள நிலத்தைச் சமூக நீதி கிடைக்கும் வகையில் குறைந்த வருவாய் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கும் கொடுக்கும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்ற காரணத்தால் தான், அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு மானியமாக ரூ. 20 இலட்சம் அவர்களுக்கு வழங்குவதற்கு முன் வந்திருக்கிறார்கள். திருவான்மியூருக்கு அடுத்துள்ள கொட்டிவாக்கம் பகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான ரூ. 61.03 இலட்சம் பெறுமானமுள்ள ஐந்தரை ஏக்கர் நிலம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றை மேம்பாடு செய்வதற்கு ரூ. 38.22 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ரூ. 99.25 இலட்சம், அந்த நிலத்தை மேம்பாடு அடையச் செய்வதற்கும், நிலத்தின் கிரயமாகவும் ஆகிறது. இது மிகப் பெரிய தொகை என்றாலும் பத்திரிகை நிருபர்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு மானியமாக ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.



1990 ஆகஸ்ட் 20]

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பத்திரிகை நிருபர்கள் வீட்டு வசதி சங்கத்திற்கு நம்முடைய கழக அரசு உதவி வழங்கியதைப் போல இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இந்த அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆந்திர அரசின் சார்பில் குடிநீர் மற்றும் வடிகால் வசதி மற்றும் சாலை அமைத்தல் ஆகியவற்றுக்காக இதே போன்று திட்டம் செயல்படுத்தப்பட்ட நேரத்தில் அங்கே ரூ. 20 இலட்சம் மானியமாக அரசின் சார்பில் வழங்கியிருக்கிறார்கள். அதே போல கேரளாவிலே கட்டுமான செலவிற்காக அரசின் சார்பில் 25 சதவிகிதம் மானியத் தொகையாக வழங்கியிருக்கிறார்கள். இந்த இரண்டு மாநிலங்களின் தகவல்கள் தான் தற்போது என்னிடத்திலே இருக்கின்றன.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் சென்னையிலே மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளிலும் இருக்கிறார்கள். ஆகவே ஆங்காங்கே நிருபர்கள் வீட்டு மனைகள் வேண்டுமென்று கேட்டால் இதே போன்று சலுகையில் ஆங்காங்கே அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைக்கப்பட்டிருப்பது கூட்டுறவுச் சங்கம். கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பின் பெயரால் நிலம் வாங்கப்பட்டு அதனுடைய மேம்பாட்டுச் செலவிற்காக ரூ. 20 இலட்சம் அரசின் உதவித் தொகை என்ற வகையிலே ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய மற்ற பகுதிகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கப்படுகிற மனைகள், வீடுகள், அடுக்கு மாடி வீடுகள் ஆகியவற்றில் பத்திரிகையாளர்களுக்காக 3 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதே மாதிரி வாடகை வீடுகளை எடுத்துக் கொண்டால் சென்னை மாநகரத்தில் பத்திரிகை நிருபர்களுக்காக பீட்டர்ஸ் காலனி, பட்டினப்பாக்கம் குடியிருப்பு ஆகியவற்றில் 60 வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 15 வீடுகள் என்று பத்திரிகை நிருபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இருக்கக் கூடிய பல்வேறு பத்திரிகை நிருபர்களுக்கு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் 15 வீடுகள் மாவட்டங்களில் ஒதுக்கினால், தற்போது பத்திரிகைகள் அதிகரித்துக் கொண்டு வருகிற காரணத்தால், போதுமானதாக இல்லை. ஆகவே அதிகப்படியான வீடுகளைக்

கட்டி, பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான வீடுகள் ஒதுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-50 மணி

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வாடகை வீடுகளாகயிருந்தால் அங்கேயிருக்கக்கூடிய வீடுகளுடைய எண்ணிக்கை அடிப்படையில் மூன்று சதவீதத்தை நாம் ஒதுக்குகிறோம். அதைப்போல புதிய வீடுகள்—ஃபிளாட்டுகள், மனைகள் அல்லது வீடுகள் என்று கட்டி முடிக்கப்படும்போதும் மூன்று சதவீதம் என்ற அடிப்படையில் நாம் ஒதுக்கீடு செய்கிறோம். ஆகவே புதியதாக வீட்டு வசதிகள் உருவாகும்போது நிச்சயமாக இந்த விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசு தயங்காது.

## திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள்.

***7084 திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள் தாங்கள் விரும்பினால் இதர கோயில்களுக்கு மாற்றுகின்ற உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறநிலையத் துறையில் ஏற்கனவேயிருந்த அரசுகள் எல்லாம் பலவிதமான மானியங்களைக் கொடுத்து ஆங்காங்கே திருக்கோயில்களில் பணிபுரியும் அலுவலர்களை வைத்து இருந்தார்கள். பிறகு அவர்கள் அரசு பணியாளர்கள் ஆக்கப்பட்டார்கள். இப்போது பெண்களுக்கும் அரசுப் பணிகளைக் கொடுக்கும்படியான ஒரு காலம் வந்திருக்கும்போது, அவர்களுடைய சம்சாரம் வேறொரு இடத்தில் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த இடத்திற்குப் போகப் பிரியப்படுகிறேன்



என்று ஊழியர்கள் சொல்லும்போது, அந்தக் கட்டத்தில் அந்தப் பணியாளர்களை அந்த இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் சில அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். ஆனால், அதிகமாக அந்தந்தப் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஊழியர்கள்தான் திருக்கோவில் ஊழியர்களாக இருக்கிறார்கள். அவர்களை இன்னொரு கோவிலுக்கு மாற்றம் செய்கிறபோது அந்தக் கோவிலில் காலியிடம் இருக்க வேண்டும். ஆனால், அரசு ஊழியர்களைத் தவிர, மற்ற ஏனைய ஆலய ஊழியர்களை நியமனம் செய்கிற அதிகாரம் அந்த தக்காருக்கோ அல்லது அறங்காவலர் குழுவிற்கோ இருக்கிறது. ஆகவே, இன்னொரு இடத்தில் காலியிடம் இல்லாவிட்டால் அங்கே அவர்களை மாற்ற முடியாது. ஆகவே தான் கேள்விக்கு இடமில்லை என்று பதில் சொன்னேன்.

## சுற்றுலாத் துறை மூலமாகத் தங்கும் விடுதிகள்

***8055 திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :**

மாண்புமிகு இந்து-சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையில் அருள்மிகு அரப்பளீஸ்வரர் திருக்கோவில் மற்றும் அங்குள்ள நீர்வீழ்ச்சி ஆகிய இடங்களை பார்ப்பதற்கு சுற்றுலாப் பணிகள் தினமும் வருவதால் சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதிகள் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கொல்லிமலை, மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இம்மாவட்ட சுற்றுலாத்தல மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 7 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொல்லி மலையில் அமைந்திருக்கிற அருள்மிகு அரப்பளீஸ்வரர் திருக்கோவிலைப்

ார்ப்பதற்கும், அங்கே இயற்கையாக அமைந்துள்ள நீர் ழ்ச்சியைப் பார்ப்பதற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் ாக்டர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட வல்வில் ஓரி ழா ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்கள் இரண்டு மற்றும் ன்றாம் தேதிகளில் நடைபெறுவதைக் காண்பதற்கும் பொது க்கள் நிரம்ப வருகிறார்கள். அந்த விழாக்காலத்தில் வருகிற பாது மக்களுக்குப் போதிய தங்கும் வசதி இல்லாத காரணத் ால் நிறைய சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் னதில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் ங்கே தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு முன்வருவார்களா என்று றிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் வர்களே, அங்கே கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற தங்கும் டுதி முடியும் தருவாயில் இருக்கிறது. அதற்குப் பிறகு மேலும் ப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவது பற்றி பரிசீலிக்கலாம்.

0-55 மணி

யல்மில் காலனிப் பகுதியை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைத்தல்.

*3465 திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இலுப்பையூரணி ஊராட்சியைச் சேர்ந்துள்ள லாயல்மில் காலனி குதியைப் பிரித்து கோவில்பட்டி நகராட்சியுடன் இணைக்க வண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை ன்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1990 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின் ாரணமாக நிர்வாக மாறுதல்களுக்கு 30—6—1991 வரை டை விதிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு இது குறித்து பரி லித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.







திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்பட்டி நகரத்தையொட்டியுள்ள, லாயல்மில் காலனி என்று சொல்லக்கூடிய பகுதி, இலுப்பையூரணி ஊராட்சி என்ற அந்த ஊராட்சி மன்றத்தினுடைய எல்லை யிலிருந்து கொஞ்சம் அதிகமான தூரத்தில், நகரத்தையொட்டி இருக்கிற காரணத்தாலே, ஊராட்சியிலிருந்து அந்த மக்களுக்கு வேண்டிய விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதி களைச் செய்து கொடுப்பதிலே, பொருளாதார வசதி இல்லை என்ற காரணத்தாலே, அந்த வசதிகள் செய்து கொடுக்கப்படா மல் இருக்கின்றன. ஆகவே நகரத்தோடு சேர்க்க வேண்டும் என்று ஊராட்சி மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்த நகர மன்றமும் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இப்போதுதான், அதாவது 6 மாதங்களுக்கு முன்னால்தான், இந்தத் தடை வந்திருக்கிறது. ஆகவே, ஒரு சாதாரண பிரச்சினைக்கு இவ்வளவு காலதாமதம் ஆகாமல், உடனுக்குடன் அந்த ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறை வேற்றியவுடனே, நகர மன்றமும் ஏற்றுக்கொண்டால், உடனடி யாக அவர்கள் அந்தப் பகுதியை அதோடு இணைத்துக் கொள் வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக செய்வதற்கு, வேண்டிய விதிகளை திருத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தையொட்டி முன்னாள் கோவில்பட்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் மதிப்புக்குரிய திரு. ரங்கசாமி அவர்கள் ஒரு மகஜரை அனுப்பி யிருந்தார்கள். அது பற்றி பரிசீலிக்கப்பட்டது. பரிசீலிக்கப் பட்டு, அந்த நகராட்சியினுடைய தீர்மானம் பெற வேண்டும் என்று ஒரு முறை அனுப்பப்பட்டு, திரும்ப சில காலம் கழித்து, அதுவும் வரப்பெற்றது. அதற்குப் பிறகு, இலுப்பையூரணி ஊராட்சி, லாயல்மில் காலனி பகுதியைப் பிரித்து, கோவில் பட்டி நகராட்சியுடன் சேர்க்க தீர்மானம் நிறை வேற்றியிருந்தும், அந்தத் தீர்மானத்தில், அப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டிய சில பகுதிகளினுடைய சர்வே எண்கள் விடப்பட்டு விட்ட காரணத்தால் திரும்பவும் அது அனுப்பப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, இன்னும் நகராட்சி இயக்குநரிடத்தி லிருந்து அந்த அறிக்கை வரப்பெறாமல் இருக்கிறது. இந்தத் தடை யாணை இருந்தாலும் கூட, அதற்குரிய நடவடிக்கைகளை அப் போது எடுத்து இருக்கிறார்கள். அதற்குள் தடையாணை பிறப் பிக்கப்பட்டுவிட்டது. ஆகவே இதில் காலதாமதம் ஆகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதி, ஒரு நகராட்சி யோடு அல்லது வேறு ஒரு ஊராட்சியோடு சேர்க்கக்கூடிய

[1990 ஆகஸ்ட் 20

இந்த மாதிரி காரியங்களை எல்லாம் செய்வதற்கு அரசு வரை வருவதற்குப் பதிலாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அதாவது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தினுடைய அந்த அளவிலே, இதைச் செய்துகொள்வதற்கான நடைமுறையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலான கோரிக்கைகள் சரியானவையாகவும், தவறானவைகளாகவும், அரசியல் காரணங்களுக்காக சில நேரங்களில் பகுதிகளைப் பிரித்தால்தான், தங்களுடைய ஆதிக்கம் இருக்கும் என்ற அடிப்படையில் சில தவறுகள் அவ்வப்போது நடந்துவிடுகின்றன. அதனால்தான் அரசாங்கத்திற்கு வந்து பரிசீலிக்கப்பட்டு, துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இப்போது அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### செயற்கை புல்தரை அமைத்தல்

***10121 திரு. இளம்வழுதி** :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எழும்பூரிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் " Astro Turf " என்று சொல்லப்படுகிற செயற்கை புல்தரை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; எழும்பூரிலுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கத்தில் செயற்கை புல்தரை அமைக்கும் திட்டம் எதுவும் மாநகராட்சியின் வசம் இல்லை.

**திரு. இளம்வழுதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும், மத்தியப் பிரதேசத்தில் போபாலிலும், உத்தரப்பிரதேசத்தில் லக்னோவிலும், பஞ்சாபில் பாட்டியாலாவிலும், இதுபோன்ற 'ஆஸ்ட்ரோ டர்ப்' இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் ஓரிடத்தில் கூட இந்தச் செயற்கை புல்தரை இல்லை. இந்த நிலையிலே, மற்ற மாநிலங்களைப் போல தமிழ்நாட்டிலிருந்து விளையாட்டு வீரர்களை உலக அளவிலே நடைபெறுகிற போட்டிகளிலே கலந்து கொள்கின்ற, தரமுள்ள வீரர்களை நம்மால் உருவாக்க முடியவில்லை. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் அதை அமைக்க முன்வருவார்களா என்று கேட்டுக் கொள்வதோடு மேற்படி செயற்கை புல்தரையை அமைக்கின்றபோது, அதற்கு ஆகின்ற மொத்தச் செலவில் பாதித் தொகையை மத்திய அரசாங்கம் தருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புவதோடு.. ..... (மணியடிக்கப்பெற்றது.) அந்தத் தொகையைப் பெற்று........



1990 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது தொடர் கதையாக அல்லவா இருக்கிறது ! மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்து, தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் தங்களுக்கு நீண்ட கால குத்தகை கொடுத்தால், அதை ஏற்று நடத்தலாம் என்று தனியார் கழகம் மாநகராட்சிக்கு மனு செய்துள்ளது. தற்சமயம், மாநகராட்சியினுடைய கொள்கை, தங்களுக்கு இடங்கள் தேவைப்படுகிறபோது, யாருக்காவது, நீண்டகால குத்தகைக்குக் கொடுத்துவிட்டால், திரும்பப் பெற இயலவில்லை என்ற அடிப்படையில், நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்தி வைத்திருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவலையொட்டி, அவர்கள் மீண்டும் மனு செய்து, தற்போது 21-5-1990-ல் இது சம்பந்தமாக மாநகராட்சி அதிகாரிகள், வருவாய்த்துறைச் செயலாளர், கல்வித்துறைச் செயலாளர், சென்னை விளையாட்டு மற்றும் பயிற்சி மைய அதிகாரிகள் ஆகியோருடன், தலைமைச் செயலாளர் அவர்கள் கலந்து பேசி, அதற்கான ஒரு முடிவை எடுக்கலாம் என்பதும், அதற்கிடையில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட கர்நாடக அரசின் அந்த டென்னிஸ் சங்கத்திற்கு மாநகராட்சியில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது சம்பந்தமாகவும், அவர்கள் செய்துள்ள இதர சலுகைகள் பற்றியும் ஆய்வுக்காக கேட்கப்பட்டு இருக்கிறது. அது கிடைத்தவுடன் பரிசீலிக்கப்படும்.

### நடமாடும் நியாய விலைக் கடைகள்

***6887 திரு. கே. அர்ஜுனன்** :

**திரு. எஸ். டி. உகம்சந்த்** :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நடமாடும் ரேஷன் கடைகளை அமைக்க மைய அரசு மாநில அரசைக் கோரியுள்ளதா ?

[1990 ஆகஸ்ட் 20

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் நடமாடும் நியாய விலைக் கடைகள் அமைக்க மைய அரசு 7.5 லட்சம் ரூபாய் கடனும் 2.5 லட்சம் ரூபாய் மானியமும் வழங்கியுள்ளது.

11-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

வினா எண் 8059 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரித்தல்

*7622 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காற்றாடி ஆலை அமைத்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், செங்கோட்டை வட்டம், ஆய்க்குடியில் காத்தாடி ஆலை அமைத்து மின்சாரம் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது என்று கருதுகிறது இந்த இடத்தில் நல்ல காற்று, விசையுடன் உள்ளது. உலக வங்கி அதிகாரிகள் இந்த இடத்தைப் பார்வையிட்டுள்ளனர். உலக வங்கியின் முடிவான பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.





திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைலர் அவர்களே, காற்றாடி ஆலையின் மூலமாக மின்சாரம் அளிக்கின்ற இந்த ஆலை, தமிழகத்தில் எங்கெல்லாம் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? இந்த ஆலைகளை அமைப்பதற்கு தனியார்களுக்கு அனுமதி கொடுக்கின்ற திட்டம் அரசிடத்திலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டில் முல்லைக்காடு, கயத்தாறிலே இரண்டு இடங்கள், முப்பனந்தல், புளியங்குளம், சுல்தான்பேட்டை ஆகிய ஆறு இடங்களில் இந்த காற்றாடி ஆலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் 14 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனியார்கள் இந்தத் திட்டத்தை ஆதரிப்பதற்கு முன் வந்திருகிறார்கள். காரணம் மின்சாரம் இல்லாத நேரங்களில் அவர்கள் டீசலை வைத்து மின்சாரம் உற்பத்தி செய்கின்றபோது அதிகமாக, ரூ. 2, ரூ. 3 என்ற அளவில் ஒரு யூனிட்டிற்கு ஆகிறது. இப்படி காற்றாடி ஆலை வைத்து காற்றின் மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பதால், சுமார் ரூ. 1.50 தான் அவர்களுக்கு ஆக வாய்ப்பிருக்கிறது. லாபத்திலே ஓடுகின்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு, இன்கம் டாக்சிலிருந்து அவர்களுக்கு ஒரு சலுகையும் அளிக்கிறார்கள். ஆகவே இப்போது பல முதலாளிகள் காற்றாடி ஆலைகளை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அப்படி வருகிறவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்பதற்காக உடனடியாக அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதற்காக அவர்கள் விண்ணப்பித்தவுடன் அவர்களுக்கு அனுமதியை மின்சார வாரியமே வழங்கிவிடலாம். அரசுக்குக் கூட வரத் தேவையில்லை என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பல்வேறு கம்பெனிகள் 250 கே.வி. மின் திறன் கொண்ட 6 யூனிட்டுகளை இதுவரையில் போட்டிருக்கிறார்கள். மேலும் பலர் இப்போது விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தாலுக்காவிலே பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற காற்றாடி ஆலைகளை அமைத்தால் அவைகளுக்கு மிக விரைவிலே மின் இணைப்பு கொடுக்க முடியும் என்பதை உத்தேசித்து மிக விரைவிலே இந்த ஆய்க்குடி பகுதியிலே காற்றாடி ஆலைகளை அரசு அமைத்துக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காற்றாடி ஆலைகளின் மூலம் 500 மெகாவாட்டுகள் தயாரிக்க முடியும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள், எட்டாவது

(மாண்புமிகு திரு. துரைமுருகன்] [1990 ஆகஸ்ட் 20

ஐந்தாண்டுத் திட்டத்திலே 100 மெகாவாட் தயாரிக்கலாம் என்று நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அதில் 50 இடங்களை உலக வங்கியும் பார்வையிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரை கிடைத்த பிறகு—பரிந்துரை மட்டுமல்ல நிதியும் அவர்களிடத்திலிருந்து தான் நாம் பெறவேண்டும்—எனவே அந்தப் பரிந்துரை கிடைத்த பிறகு, உடனடியாக எங்கெங்கு சாத்தியம் உள்ளதோ அங்கெல்லாம் இந்த ஆலைகள் அமைக்கப்படும்.

தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட கண்காட்சி.

*620 திருமதி எஸ். பி. சற்குணம்:

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பூம்புகார் கைவினைப்பொருள் கழகத்தால் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளின் மூலம் கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு இழப்பு?

(இ) தற்போது அதன் நிலை என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு கைவினைப்பொருள் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 376 கலைப் பொருள் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் ரூ. 56 இலட்சம் நிகர லாபம் ஈட்டியிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பு மொத்தம் ரூ. 84 இலட்சம். இந்த ஆண்டுதான் அந்த இழப்பிலிருந்து மீண்டு ஏறத்தாழ ரூ. 13 இலட்சம் லாபத்தோடு இந்த நிறுவனம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

11-05 மணி

திருமதி எஸ் பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூம்புகார் கைவினைப் பொருள் கழகத்தில், தமிழகம் தவிர்த்து வெளி மாநிலங்களில் நடைபெற்ற கண்காட்சிகளில் அரசுக்கு இழப்பு ஏதேனும் ஏற்பட்டதா என அறிய விரும்புகிறேன்.



1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால
மாக, தமிழகம் தவிர வெளி மாநிலங்களில் 25 இடங்களில்
கண்காட்சிகள் நடத்தப்பட்டன. அந்தக் கண்காட்சிகளின் மூல
மாக அரசுக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்
பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திற்கான காரணங்களை ஆய்வு
செய்தபோது, அதற்கான விளம்பரம் செய்த வகைகளிலே
யும் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்காக
அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக செலவுகள் மேற்
கொண்டதன் காரணமாகத்தான் இழப்பு ஏற்பட்டது என்
பதை அறிந்து இனி வரும் எதிர்காலங்களில், இந்த இழப்புகள்
ஏற்படா வண்ணம் நடைபெறுகிற கண்காட்சிகளின் மூலம்
லாபம் ஈட்டுகிற வகையிலேயும், நடைபெற இருக்கிற கண்
காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலும், இந்த அரசு
அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து வருகிறது.

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைத்தல்.

*5497 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*8318 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது
மலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம்
அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு
அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாதுமலை நெல்லிவாசல்
நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்
எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசிலனையில் இல்லை.

[1990 ஆகஸ்ட் 20

திரு. ப, சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நெல்லிவாசல்நாடு ஜவ்வாது மலையிலே உள்ளது.
அந்த ஜவ்வாது மலைக்கும் நெல்லிவாசல்நாட்டிற்கும்
போக்குவரத்து வசதி இல்லை. அங்கே ஏறக்குறைய 15 கிரா
மங்கள் சுற்றி இருக்கின்றன. அதனால் இதை மறு பரிசீலனை
செய்து அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க
அரசிடம் ஏதேனும் உத்தேசம் உள்ளதா? இனியாவது உத்
தேசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிவாசல்நாட்டிற்கு
அருகில் உள்ள புதுநாடு என்னும் இடத்தில் ஒரு
ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது செயல்பட்டுக் கொண்
டிருக்கிறது. ஆகவே இப்போது நெல்லிவாசல் நாட்டில் புதிய
தாக ஒரு சுகாதார நிலையத்தை துவக்குகின்ற கருத்துரு
எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,
புதுநாட்டிற்கும் நெல்லிவாசல்நாட்டுக்கும் இடையே ஏறக்
குறைய 16 கிலோ மீட்டர் இருக்கிறது. அங்கிருந்து எந்தப்
பகுதியிலேயும் போக்குவரத்து இல்லாத காரணத்தால்
அங்கே நோய்வாய்ப்படுகின்றவர்களை கட்டில் மேலே
தூக்கி வருகின்ற காலக் கட்டத்தில்தான் அந்த இடம்
இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்காகவும், அங்
குள்ள மலை வாழ் மக்களை வாழ வைப்பதற்காகவும்
அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க
மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும்
ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு விரிவு
படுத்துகிறபோது, அதனுடைய எண்ணிக்கையை அதிகரிக்
கின்றபோது, அதனுடைய இந்தக் கருத்துருவையும் அரசு
பரிசீலிக்கும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, ஜவ்வாது
மலை, நெல்லிவாசல் நாட்டைச் சுற்றி 15 கிராமங்கள் இருக்
கின்றன என்பதோடு அங்குள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதி
இல்லை என்பதையும் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர் அவர்கள் சொன்னார்கள். அத்தோடு ஆசிரியர்கள், வனப்
பணியாளர்கள் இவர்கள் எல்லாம், இந்த அடிப்படை வசதி கூட
இல்லாத காரணத்தால் மிகவும் சிரமப்படுகிறார்கள். அங்கு
பணி செய்கிற ஆசிரியர்கள் பல மாதங்களுக்கு ஒரு முறைதான்



1990 ஆகஸ்ட் 20] [திரு. எம். அப்துல் லத்தீப்]

அந்தப் பணிகளுக்கே செல்லுகிறார்கள். வனப் பணியாளர்களும்
அங்கே அடிக்கடி செல்வது இல்லை. அவர்கள் நோய்வாய்ப்
பட்டால் அவர்களுக்கு மருத்துவ வசதி கூட அங்கே இல்லை
என்பது முக்கியமான காரணங்களிலே ஒன்று. எனவே நெல்லி
வாசல்நாட்டில் அருள்கூர்ந்து அந்த மலை ஜாதி மக்களுக்காக
இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்
வருமா அல்லது நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்
கள் கூறியிருக்கிற கருத்துக்களையும் பரிசீலனை செய்ய, அரசு
ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவு படுத்துகின்றபோது,
எண்ணிக்கையை அதிகரிக்கின்ற போது நிச்சயமாக கருத்தில்
கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக் குழு.

* 6511 திரு. ஏ. தங்கராஜ் :
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆதிதிராவிடர்களுக்கு பதவி உயர்வுக்காக உயர்மட்டக்
குழு அமைக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : தலைவர் அவர்களே,
இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*)
இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்
பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்.

பேரவைக் கூட்டத் தொடரின் முதல் நாளில் ''வினா விடை நேரம்''
இடம் பெறுவது குறித்தும் சில உறுப்பினர்களின் இருக்கைகள்
மாற்றப்பெற்றுள்ளது தொடர்பாக நீதிமன்றத்திலும், குடியரசுத்
தலைவரிடத்திலும், அவையிலும் எழுப்பப் பெற்றுள்ள பிரச்சினைகள்
குறித்தும்.

திரு. கே. ரமணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே,
இந்த அவையிலே இருக்கும்படியான உறுப்பினர்கள் உட்காரு
வதற்கு இருக்கும்படியான இடங்களைத் தீர்மானித்து, இருக்கை
களைத் தீர்மானித்து, அதற்கான உத்திரவுகளைப் போடும்படி

யான பொறுப்பு தங்களுடையது. தங்களுடைய கட்டுப்பாட்டில் இங்கே இருக்கும்படியான உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் இருக் கிறோம். இப்படிப்பட்ட இந்த அவையில், அந்த இருக்கைகள் மாற்றத்திற்காக இப்படிப்பட்ட ஒரு நிலை ஏன் ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. இது சபையினுடைய கண்ணியத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஊறு விளைவிப்பதாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, சபையினுடைய அருமையான நேரத்தையும் இது வீணாக்குகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே ஒரு இருக்கை மாற்றத்திற்கு இப்படிப்பட்ட நிலை ஏன் வரவேண்டும் என்ற விளக்கங்கள் தங்களிடமிருந்து கிடைத்தால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு) தலைவர் அவர்களே, தங்களிடத்தில் வெறும் விளக்கம் கேட்பது மட்டுமல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலை எதிர் காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நாம் என்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்பதையும் தங்களுடைய விளக்கத்தோடு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-10 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினை, அதைத் தொடர்ந்து இந்த அவையினுடைய இறையாண்மை, அவைத் தலைவருடைய தனிப்பட்ட அதிகாரங்கள் குறித்து சில ஐயப் பாடுகள் எழுந்துள்ளன. அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்கம் பெற விரும்புகிறேன் என்ற அடிப்படை யில் எழுந்து நிற்கின்றேன். முதலிலே, அவையிலே இருக்கைகள் யாருக்கு எங்கு தரப்பட வேண்டும் என்று இறுதி முடிவு செய்ய வேண்டிய அதிகாரம் தங்களுக்கே உரியது என்பதை நாம் அறிவோம். சில விஷயங்களில் உறுப்பினர்கள் வழக்கு மன்றங் களுக்குச் சென்றால் இந்த அவை அதிகாரத்திற்கு அப்பாற்பட்டு கட்சிகளுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பிரச்சினைகளைப் பற்றி வழக்கு மன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு சொல்ல முடியும். தீர்ப்பு சொல்ல வேண்டும். ஆனால், அதே நேரத்தில் Status quo ante என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு பழைய நிலையே நீடிக்க வேண்டும் என்று சொல்வதற்கும் வழக்கு மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட தேதி வரையில் குறிப்பிட்ட இடத்தில்தான் அவர்கள் உட்கார வேண் டும் என்ற ஒரு கருத்து சொல்லப்படுமேயானால், அந்தக் கருத்து தங்களை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்தும் என்பதை இன்றைக்கு சட்ட வல்லுநர்கள் ஐயப்பாடோடு சபைத் தலைவர் என்ன சொல்ல இருக்கிறார் என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று. எதிர்க் கட்சிகளின் சார்பாக இந்த அவை நடவடிக்கை குறித்து அல்ல, தாங்கள் எடுக்கின்ற சில முடிவுகளைப் பற்றி குடியரசுத் தலைவர் அவர்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுத்ததாகவும், அந்த மனுவை குடியரசுத் தலைவர் அவர்கள்



பெற்றுக் கொண்டதாகவும், ராஜ் பவனில் அந்தச் சந்திப்பு நடந்ததாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறின. அதற்கு அடுத்த நாள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களைச் சந்தித்து சில விளக்கங்களைத் தந்தார் கள் என்ற செய்தியும் வெளியாகியிருக்கிறது. நாங்கள் அறிந்து கொள்ள விரும்புவது, யார் எந்த மனுவை யாரிடத்திலே கொடுத் தாலும் அவர்களுக்குப் பதில் சொல்லக்கூடிய கடமை அல்லது விளக்கம் சொல்லக்கூடிய கடமை தங்களுக்கு இருக்கிறதா? எங்களைப் பொறுத்த வரையிலே இறையாண்மை பெற்ற இந்த அவைக்குத்தான் தாங்கள் உரிய நேரத்தில் உரிய முறையில் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறீர்களே தவிர ஜனாதிபதி உள்ளிட்டு வேறு யாருக்கும், எந்த வெளிப்பட்ட, ஒரு தனிப்பட்ட அதிகாரத்திற்கும் தாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர் இல்லை. ஏனென்றால், முழு இறையாண்மைப் பெற்ற இந்தச் சபைக்குத்தான் நீங்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறீர்கள். அதுவும் உரிய முறையில் கேட்கப் பட்டால் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறீர் கள். ஆனால் பத்திரிகைச் செய்தி வந்திருக்கும்போது, பல சந்தேகங்கள் உருவாகியிருக்கின்றன. எங்களைப் போன்ற சட்ட மாணவர்களுக்குச் சில சந்தேகங்கள். விளக்கம் பெற விரும்புகிறோம். தயவு செய்து தாங்கள் அதற்கு விளக்கம் தரவேண்டும்.

ஜனாதிபதி அவர்கள் பெற்றுக்கொண்ட மனுமீது, நீங்கள் வந்து என்னிடத்திலே விளக்கம் சொல்ல வேண்டுமென்று உங் களை அழைத்து நீங்கள் சந்தித்தீர்களா அல்லது நீங்களாகவே சந்தித்தீர்களா? ஒரு நாட்டினுடைய குடியரசுத் தலைவர் வருகிறார் என்றால் மரியாதைக்காக—மரியாதைக்கு ஒரு சபை யினுடைய தலைவர், அதுவும் இறையாண்மை பெற்ற சட்ட மன்றத்தினுடைய தலைவர் சென்று சந்திப்பது ஒரு மரபாக, பண்பாட்டிற்கு ஏற்புடைய ஒன்றாக இருக்க முடியும். ஆனால் யாரோ கொடுத்த மனுவிற்குத் தாங்கள் சென்று விளக்கம் தந்தீர்கள் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதே; இந்தச் சபையினுடைய இறையாண்மை பற்றி எங்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறதே; நீங்கள் அப்படிப் பதில் சொல்லக் கடமைப்பட்டவரா? இது மிகப் பெரிய அரசமைப்பு சார்புடைய சட்டப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினால் தாங்கள் தயவு செய்து இதற்கான விளக்கங்களைத் தர கடமைப்பட்ட வராக இருக்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டு, முதற் கேள்வி நீதி மன்றத்தைச் சார்ந்த கேள்வியாக இருக்கின்ற காரணத்தி னால், அவர்கள் அளித்த தீர்ப்புக்குச் செல்லாமல் இருக்கையை யாருக்கு ஒதுக்க வேண்டும் என்ற பிரச்சினையோ அல்லது இந்த அவை நடத்தப்படுகின்ற பிரச்சினை குறித்தோ தங்கள் அதிகார வரம்பு என்ன என்பதை எங்களுக்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இரண்டு பிரச்சினைகளையும் நான் எடுத்து தங்களுடைய விளக்கங்களைக் கோருகிறேன்.

11-15 மணி

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டது போல் எந்த இருக்கையில் உறுப்பினர்கள் அமரவேண்டும் என்று நிர்ணயிக்கின்ற உரிமை பேரவை விதி எண் 6-ன்படி தங்களுக்கு உண்டு என்பதை நான் நிச்சயமாக அறிவேன். அதை ஏன் என்று நான் கேட்கவில்லை. முன் வரிசையில் வீற்றிருந்த திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு இரண்டாவது வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் எங்களோடு இந்த வரிசையில் வீற்றிருந்த திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு, அவருக்கும் அப்பால் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இருக்கைகள் எந்த அடிப்படையிலே மாற்றி ஒதுக்கப்பட்டன என்பதை அறிந்து கொள்கின்ற உரிமை நிச்சயமாக எங்களுக்கு உண்டு. எந்த அடிப்படையிலே அவர்களுடைய இருக்கைகளை மாற்றினீர்கள் ? ஏதேனும் தங்களுக்கு கோரிக்கை வந்ததா ? எந்தக் கோரிக்கை? யாரால் அனுப்பப்பட்டது ? அந்தக் கோரிக்கையில் எதற்காக அவர்களுக்கு இருக்கைகளை மாற்றவேண்டும் என்று கோரப்பட்டு இருந்தது ? காரணங்கள் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தால், என்ன காரணங்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன ? அந்தக் கோரிக்கை எழுத்து வடிவிலே வந்து இருக்குமானால், அந்தக் கடிதத்தை இந்தப் பேரவையின் முன் நீங்கள் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இந்தப் பேரவையினுடைய இறையாண்மையை யாரும் தட்டிக் கேட்க முடியாது. நீங்கள் ஜனாதிபதியைச் சந்தித்து, ஜனாதிபதி அவர்களிடத்திலே விளக்கக் கடிதம் கொடுத்ததாக நானும் பத்திரிகையிலே செய்தி படித்தேன். ஜனாதிபதி அவர்கள் உங்களிடத்திலே—யார்வேண்டுமானாலும் ஜனாதிபதியைச் சந்தித்து மனு கொடுக்கலாம், விண்ணப்பம் கொடுக்கலாம், அதிலே தவறு கிடையாது—ஏதேனும் விளக்கம் கேட்டாரா ? விளக்கம் கேட்டிருந்தால் என்ன விளக்கம் கேட்டார் ? விளக்கம் கேட்காத நிலையிலேயே நீங்கள் கடிதம் எழுத வேண்டி வந்தது என்று சொன்னால் ஏன் வந்தது ? அப்படி ஒரு பேரவைத் தலைவர் நிச்சயமாக தன்னுடைய நடவடிக்கைகள் அனைத்திற்கும், சமாதானம் சொல்ல வேண்டும், பிரதமருக்கோ, அல்லது ஜனாதிபதிக்கோ கடிதம் எழுதவேண்டும் என்று அவசியம் இருப்பதாக, நானும் ஒரு அரசியல் சட்ட மாணவன் என்ற முறையிலே அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பேரவையினுடைய இறையாண்மையை யாரும் தட்டிக் கேட்க முடியாது. எந்த நீதிமன்றமாக இருந்தாலும் சரி,- ஜனாதிபதியாக இருந்தாலும் சரி உங்களுடைய [illegible] அவர்கள் கேட்க முடியாது. அப்படி இருக்கின்றபோது





இதைப் பற்றி எழுத்து வடிவிலே ஜனாதிபதிக்கு நீங்கள் எழுத வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு மட்டும் ஒரு கேள்வி. இப்போது மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்களும், மாண்புமிகு திரு. ரமணி அவர்களும் சில வினாக்களை எழுப்பினார்கள். இன்றைய மரபுப்படி வினா நேரம் முடிந்த பிறகு ''நேரம் இல்லா நேரத்தில்'' இதுபோன்ற வினாக்கள் எழுப்பி அதற்குப் பேரவைத் தலைவரோ, தொடர்பு உடைய செய்தியாக இருப்பின் அரசோ விடை தருவது பொதுவான இயல்பு என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் என்னைக் கேட்ட கேள்விகளை இப்போது கேட்டது சரிதான். ஆனால் எடுத்த எடுப்பிலேயே இதைக் கேட்க வேண்டும் என்று முயன்று நான் விளக்கம் தரவேண்டும் என்று வற்புறுத்தி, நான் விளக்கம் தராததற்காக 'நான் வெளிநடப்பு செய்கிறேன்' என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும் என்பதை நீங்கள் விளக்க முடியுமா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தரப்பிலே துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன். அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் கேட்க விரும்பியது 9 மணிக்குப் பின்னால் 10 மணி அல்லது 11 மணிக்குச் சபை கூடுமானால் வழக்கமாக மரபுப்படி சம்பிரதாயமாக கேள்வி நேரம் இருப்பது இல்லை. ஆனால் இன்றைய தினம் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு விடை சொல்லி ஆகிவிட்டது. இன்றைக்கு ஏன் வினா நேரம் புதிதாக வந்திருக்கிறது என்று கேட்டார் திரு. குமரி அனந்தன், அதற்கு அவர்களுக்கு விடை சொல்லியிருக்கிறேன். அதற்காக அவர் வெளிநடப்புச் செய்தாரா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அந்த விடை எங்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவர் சொல்லட்டும். அதற்காகத் தான் அவர் வெளிநடப்புச் செய்தாரா என்று திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லட்டும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே .....

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

[1990 ஆகஸ்ட் 20

*        *        *        *        *        *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டியதில்லை; விட்டு விடுங்கள்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, . .

*        *        *        *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டாம், நான் அதை அனுமதிக்கவில்லையே ; விட்டுவிடுங்கள்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்று காலையிலே வினா நேரம் ஏன் சேர்க்கப்பட்டது என்று கேட்டதற்கு, தங்களுக்கு உரிமை உண்டு என்று சொன்னீர்கள். உங்கள் விருப்பப்படி அதை நீங்கள் செய்யலாம் என்ற உரிமையை ஒத்துக்கொண்டுதான் கேட்டேன். செவிச் செல்வம் என்று நீங்கள் சொன்னீர்கள். எல்லா தடவையும் எங்களுக்கு அந்த செவிச் செல்வத்தைத் தர விரும்புகிற நீங்கள்—இதனைக் கூட — 10 மணிக்குத் தொடங்குகிறபோது அந்த செவிச்செல்வத்தைத் தந்து இருக்கலாமே என்ற எண்ணத்தோடு நாங்கள் இருந்தோம். இன்று மட்டும் ஏன் விசேசமாக இதனைத் தருவதற்கு முனைந்தீர்கள் என்ற கேள்வியும் இருந்தது.

**11-20 மணி**

பிறகு நான் அதற்கு மட்டும்தானா வெளிநடப்புச் செய்தேன் என்பதைத்தான் நீங்கள் எங்கள் கொறடாவிடம் கேட்டீர்கள். சட்டமன்றத்திலே இருக்கைகளை மாற்றி அமைக்கப்பட்டது அது அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்பட்டுக்கொண்டு இருந்து இருக்குமானால், அந்தப் பிரச்சினை வந்து இருக்காது. இருக்கைகளை மாற்றி அமைக்கப்பட்டதிலே பிரச்சினை வந்து, நீங்கள் அவர்களை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை வருகிறபோது என்ன காரணத்திற்காக இவை எல்லாம் ஏற்பட்டன, என்ன காரணத்தினாலே நீங்கள் மாற்றினீர்கள் ? அப்படி யாராவது மாற்ற வேண்டும் என்று உங்களுக்குச் சொன்னார்களா ? அப்படிச் சொன்னதன் அடிப்படையிலே உங்களால் அந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டதா ? அல்லது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே மாற்றம் ஏற்படுத்தப்பட்டதா ? என்ன காரணத்திற்காக தாங்கள் அதை மாற்றி, அதனாலே இந்த விளைவுகள் எல்லாம் ஏற்பட்டன என்று அவையிலே இருக்கின்ற மற்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அந்தப் பிரச்சினையிலே, இன்னொரு உறுப்பினர் என்ற வகையிலே நாங்கள் கேட்க ஆசைப்பட்டோம். அந்த விளக்கத்தை, சம்பவம் நடந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே நாங்கள் கேட்க ஆசைப்பட்டோம். எனவே, விளைவுகள் அப்படி இருந்த காரணத்தினாலே, விளைவுக்கு மூல காரணம் என்ன என்று தெரிந்து கொள்வதற்கு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



அந்த விளக்கத்தைக் கேட்டோம். இல்லையென்றால் நாங்கள் கேட்டிருக்க மாட்டோம். எனவே, விளக்கம் கேட்டதை நியாயம் என்றே நாங்கள் கருதுகின்றோம். ஒரு சம்பவம் நடந்து விட்டது. நடந்த சம்பவத்திற்கு விளக்கம் இல்லாத காரணத்தினாலே, நீங்கள் விளக்கம் தரவில்லை என்ற காரணத்திற்காக— 11 மணிக்குப் பிறகு விளக்கம் சொல்லலாம் என்று நீங்கள் சொன்னீர்கள்—அந்த விளக்கம் உடனடியாக வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தித்தான் வெளிநடப்பு செய்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது நான் திருப்பி உங்களிடத்திலே கேட்கிறேன். தொடர்புடைய உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கைகள் மாற்றப்பட்டதற்காக இரண்டு வினாக்களைத் தொடுத்தார்கள். யார் யாருடைய இருக்கைகள் மாற்றப்பட்டனவோ அவர்கள்தான் அதை எழுப்பினார்கள். அவர்களுக்கேகூட, இந்த நேரத்திலே எழுப்பக்கூடாது என்ற விதியின் அடிப்படையிலேதான் நான் உட்காரச் சொன்னேன். நீங்கள் எழுந்து குறுக்கிடும்போது, நான் அப்போதே, இது உங்களுக்கு நேரடியாகத் தொடர்பில்லாதது, என்றாலும், அவையினுடைய மரபு கருதி நான் 11 மணிக்குக் கண்டிப்பாகச் சொல்கிறேன் என்று சொன்ன பிறகும், இப்போது இவ்வளவு விரிவாகப் பேசக்கூடிய வாய்ப்பு பெறுகிற நீங்கள், அப்போது அதை எதிர்த்து வெளிநடப்புச் செய்தது சரிதானா என்பதை நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே. அவர்களைத் தூக்கிச் சென்று இருக்கிறார்கள்; இழுத்துச் சென்று இருக்கிறார்கள். ஒருவர் அடிபட்டு காயமே பட்டிருக்கிறார். இந்தச் சூழ்நிலையிலே, என்ன ஆகியிருக்கிறது என்றுதான் நாங்கள் கேட்க விரும்பினோம். அவ்வளவுதான்.

*** மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நிகழ்ச்சிகள், சில சூழ்நிலைகளில் உருவாகின்றன. அவற்றை வைத்துக் கொண்டு இந்த மன்றத்தில் மேலும் மேலும் விளக்கம் பெறவேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட மனப்பான்மையில் ஒரு செயலைச் செய்ததற்கு விளக்கம் தரவேண்டுமென்பது அவசியமில்லை என்பதை நான் உணருகிறேன் அல்லது நான் எண்ணுகிறேன்.

இங்கு எழுப்பப்பட்ட கேள்விகளில் ஒன்று, நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்த அவை கட்டுப்படுகிறதா என்பது. நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்த அவை கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லையென்பது எல்லோருடைய கருத்தாகும். அது எல்லோருடைய கருத்து மட்டுமல்ல, அரசியல் சட்டம் நமக்குத் தந்திருக்கிற உரிமை. சட்டமன்றத்திற்குள் நடைபெறுகிற, நடைபெற

[டாக்டர் க. அன்பழகன்] [1990 ஆகஸ்ட் 20

வேண்டிய எதற்கும் நீதிமன்றம் கட்டுப்பாடு விதிக்க முடியாது.
ஆனால், சட்டமன்றத்திற்கு வெளியிலே நடைபெறுகின்ற
நிகழ்ச்சிகளை வைத்து ஒரு நீதிமன்றம் தீர்ப்பு அளிக்குமானால்,
வெளியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சட்டமன்றம் — நாமே
— ஒரு முடிவுக்கு வர முடிவதில்லை. வெளியிலே நடைபெற்ற
நிகழ்ச்சிகள் அது எந்த அடிப்படையிலே இருந்தாலும், அது சம்
பந்தமாக எந்த முடிவை யார் மேற்கொண்டாலும், அந்த முடிவு
நம்மை முழுவதும் கட்டுப்படுத்தாது. எனவே, அந்தச் சூழ்
நிலையில் வெளியிலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்ற வகையில்
ஒரு தரப்பு, மறு தரப்பு என்ற இரு தரப்பு ஏற்பட்டு, அதன்
காரணமாக ஏதேனும் முடிவு வெளியிலே, நீதிமன்றத்தின் மூல
மாக அறிவிக்கப்படுமானால் அந்தச் சூழ்நிலையினுடைய
விளைவுகளைக் கருதி, அந்த நீதிமன்றத் தீர்ப்புக்கு நாம்
ஓரளவுக்குக் கட்டுப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.
நேரடியாகக் கட்டுப்படுவதல்ல. நம்முடைய முறைகளின்படி
நீதிமன்றத் தீர்ப்போடு மோதிக்கொள்வதற்கு நாம் இடந்தரா
மல் பாதுகாத்து வந்திருக்கிறோம் ஒரு மரபாக. மற்றொன்று,
இந்த மன்றத்திலே இட ஒதுக்கீடு செய்வது சட்டப்பேரவையினு
டைய தலைவருடைய உரிமை என்பதை திரு. பாலசுப்பிரமணியம்
அவர்களே ஒப்புக்கொண்டார்கள். அந்த உரிமையைப் பயன்
படுத்தியபோது அவருக்கு, அதற்கான காரணங்கள், சட்டமன்றப்
பேரவைத் தலைவருக்கு நிச்சயமாக உண்டு. காரணமில்லாமல்
ஒரு காரியத்தில் பேரவைத் தலைவர் ஈடுபடமாட்டார்.
காரணத்தோடுதான் ஈடுபடமுடியும், ஈடுபட்டிருப்பார்.
எனவே, அவருக்குள்ள உரிமையை கேள்வியாக எழுப்பி, எப்படி
இடமாற்றம் செய்யலாம் என்று கேட்பது, மாண்புமிகு திரு.
பாலசுப்பிரமணியம் அவர்களே இங்கே சொன்ன அந்தக் கருத்துக்கு
— முதலில் சொன்னது ; உங்களுக்கு உரிமை உண்டு என்பது
ஏற்றுக் கொள்ளப்பட்டு சொல்லப்பட்டதற்கு மாறாக அதற்குப்
பின்னர், எப்படி இடமாற்றி அமர்த்தலாம் என்பது பொருத்த
மன்று. அதற்கு, பேரவைத் தலைவருக்குத் தேவையான காரணங்
கள் உண்டு. ஆனால் அதை நான் விளக்குவது அவசியமில்லை.
எனவே, அதற்குப் பின்னர் மறுபடியும் அதிலே கேள்வி
எழுப்புவது, அடிப்படையாக ஒப்புக்கொண்ட அவரது உரிமைக்கே
மாறுபட்ட ஒரு கருத்தாகும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

*11-25 மணி*

* **திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாங்கள், நமது அவை முன்னவர் அவர்கள்
சொன்ன கருத்தினை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம்.
இட ஒதுக்கீடு பற்றி நமது பேரவைத் தலைவருடைய முடிவே
இறுதியானது என்பதிலே எங்களுக்குச் சந்தேகமில்லை. அதை
நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் Caesar's wife
should be above suspicion என்று சொல்வார்கள். இதை ஏன்
செய்தீர்கள் என்று நாங்கள் கேட்கிறோம் அவ்வளவுதான்.
இதற்கு என்ன காரணம் ? தகுதியான காரணம் இருந்தால்



1990 ஆகஸ்ட் 20] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதை அறிந்து கொள்ள விரும்பு
கிறோம். It is only an information we want. அதுதான் நாங்கள்
கேட்பதேயொழிய ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தங்களுடைய மேற்
கோளுக்கு மகிழ்ச்சி. தமிழில் ஒரு மேற்கோள் உண்டு,
" முடிந்ததற்கு இல்லை முடிவு " என்று.

***திரு. உ. ரா. வரதராசன்** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நீங்கள் அவையிலே இருக்கைகளை
ஒதுக்குவது யாரும் கேள்வி கேட்க முடியாத தங்களுக்கு உள்ள
உரிமை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால்
அடுத்தடுத்த நாட்களிலே இந்த அவையிலே இருக்கைகள்
ஒதுக்கப்படுவது பற்றி எங்களுக்குச் செய்தித்தாள்கள் வந்தன.
ஒன்று ஜனதா தளத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள்
பற்றி. அதற்கு அந்தச் செய்தித் தாளிலேயே சேர்த்து
காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம்
சொல்லப்படவில்லை. இப்படி சொல்லப்படாததன் காரணமாக
அவை நடவடிக்கைகள் இன்றைய தினம் ஒரு 10 நிமிடம்
ஸ்தம்பிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு
நாளும் இது பிரச்சினையாக ஆகி, அவையின் நடவடிக்கைகள்
சீர்குலையக் கூடாது என்ற ஆர்வம் காரணமாகத்தான் தங்களிடத்
திலே எங்களுடைய அணித் தலைவர் மாண்புமிகு திரு. ரமணி
அவர்கள் கேட்டார்களே தவிர உங்களுடைய உரிமையைக்
கேள்வி கேட்கும் நோக்கத்தில் அல்ல. அந்த விளக்கம் தருவது,
இனி இந்த அவையிலே இதைப் பிரச்சினையாகக் கொண்டு
அவை நடவடிக்கைகள் ஸ்தம்பிக்காமல் இருப்பதற்கு உதவி
செய்யும் என்ற அடிப்படையில்தான் அந்த விளக்கத்தை அளிக்க
வேண்டும் என்று கேட்டார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்** : பேரவைத் தலைவர்
அவர்களே, ஜனதா தளத்தைப் பொறுத்தவரையில்
இங்கே சர்ச்சையே கிடையாது. எனவே சர்ச்சை இல்லாத
கட்சி பற்றிப் பேச வேண்டிய அவசியமே இல்லை. சர்ச்சையுள்ள
கட்சி பற்றித்தான் பேச வேண்டும். அடுத்து, ஜனாதிபதியை
சர்ச்சைக்கு உள்ளாக்க வேண்டும் என்பதில்லை. எதேச்சையாகத்
தான் அவர் வந்தார். அப்படி வந்த கட்டத்திலே அவர்கள்
மனுவைக் கொடுத்து எங்களுடைய சீட்டை அங்கே மாற்றி
விட்டார்கள், இங்கே மாற்றி விட்டார்கள் என்று சொல்லி,
இப்படி நீதிமன்றத்திற்கும் போய், பிரசிடென்டுக்கும் போய்,
உங்களிடத்திலும் பெட்டிஷன் கொடுத்ததன் காரணம் என்ன ?
அது நம்முடைய உரிமை மீறல் ஆகாதா என்பதற்கு நீங்கள்
பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மதிப்புமிகு உறுப்பினர்
பெருமக்கள் சொன்ன கருத்துக்களை மனத்தில் கொண்டு நான்
என்னுடைய விடையைச் சொல்ல வேண்டும். ஆனால் எல்லோரும்

[பேரவைந் தலைவர்] [1990 ஆகஸ்ட் 20

ஒப்புக்கொண்ட உண்மை என்னவென்றால் விதி 6-ன்படி
பேரவைத் தலைவர் ஒதுக்கும் வரிசைப்படி உறுப்பினர்கள்
இருக்கையில் அமர வேண்டும். அதற்கு எந்த வகையான கூடுதல்
குறைச்சலான உள்விதிகளோ, உட்பிரிவுகளோ கண்டிப்பாக
இல்லை ; அதற்கு விளக்கத்திற்கு இடமேயில்லை என்பதுதான்
இப்போதைய நிலை. என்றாலும், நம்முடைய உறுப்பினர்
களும், மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்
காகத்தான் இதிலே மேல் கேள்விகளுக்கு இடம் இல்லை என்ற
நிபந்தனையோடு அதைச் சொல்வது, என்னுடைய கடமை என்று
கூட நான் கருதவில்லை. உறுப்பினர்களை மதித்துத் தரப்
படுகிற செய்தி என்ற அ...வோடு அதை எடுத்துக்கொள்ள
வேண்டும்.

23—7—1990 அன்று அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில்
செல்வி ஜெயலலிதாவும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் வெவ்வேறு
கடிதங்களைப் பேரவைத் தலைவருக்குக் கொடுத்துள்ளனர். அதில்
திரு. திருநாவுக்கரசு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
திரு. உகம்சந்த் ஆகிய மூவரும் கட்சியை விட்டு நீக்கப்
பட்டுள்ளதாகவும் அவர்கள் வகித்து வந்த துணைத் தலைவர்,
கொறடா ஆகிய பதவிகளில் கீழ்க்கண்ட மாற்றம் செய்யப்
பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர் :

| | |
|---|---|
| திரு. கே. ஏ. செங்கோட்டையன் | .. துணைத் தலைவர். |
| திரு. கே. அர்ஜுனன் | .. கொறடா. |
| திரு. துரை ராமசாமி | .. செயலாளர். |

எனவே இந்த அடிப்படையில் இந்த மாற்றங்கள் செய்யப்
பட்டுள்ளன.

இரண்டாவது கேள்விக்கு விடை. நம்முடைய மேதகு
குடியரசுத் தலைவர் அவர்களைச் சந்தித்துப் பேரவைத் தலைவர்
கொடுத்த கடிதம் பற்றி. இது பேரவைத் தலைவருடைய, இந்த
அவையினுடைய இறையாண்மை, பேரவைத் தலைவருடைய
உரிமைபற்றிய வினா என்பதால் இதை எழுப்பிய பெருமக்களுக்கு
நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு விளக்கம்
சொல்லவேண்டும் என்ற முறையில், குடியரசுத் தலைவரிடத்தில்
யார் வேண்டுமானாலும் மனு கொடுக்கலாம். எதுபற்றி வேண்டு
மானாலும் கொடுக்கலாம் என்பதில் இரண்டாவது கருத்து
கிடையாது. "மக்களாட்சி உரிமை" என்ற முறையில்தான்
தங்களுடைய கருத்துக்களை, பாதிக்கப்பட்டவர்களாகக் கருது
பவர்கள் கொடுக்கிறார்கள். அதேபோல் நீதிமன்றத்திலேயும்
கூட பேரவைத் தலைவருக்கு இன்ன ஆணை பிறப்பிக்க



1990 ஆகஸ்ட் 20] [பேரவைத் தலைவர்]

வேண்டும் என்று கூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்
ள் கூட ஒரு செய்தியைக் கொடுத்து இருக்கிறார்கள். உங்கள்
னைவருக்கும் தெரிந்த செய்திதான் என்றாலும், மீண்டும்
னைவூட்டுவதற்காக இந்த வாக்கியங்களை நான் தெரிவிக்க
ரும்புகிறேன். எந்தக் காரணம் கொண்டும், எந்த நீதிமன்றமும்
பரவைத் தலைவருக்கு ஆணையிடவும் முடியாது, இதன்படி
டக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டவும் முடியாது. எனவே
ந்தப்பகுதிக்கு நான் வரவில்லை. ஆனால் மாண்புமிகு குடியரசுத்
லைவர் அவர்கள் இங்கே வந்தபோது ஒரு செய்தி சட்டமன்றம்
டக்க இருக்கிற நேரத்தில் தரப்பட்டது. அப்படித் தரப்பட்ட
பாது நான் ஏற்கனவே இது தொடர்பாக எந்த முடிவும்
டுக்கவில்லை என்ற ஒரே செய்தியைத் தான் திருப்பித் திருப்பிச்
சால்லி வந்திருக்கிறேன், இதுவரை எந்த முடிவும் எடுக்கப்பட
ல்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் ஓரே ஒரு நிருபர்
தம்பரத்தில் ஓடுகிற வண்டியில் நான் ஏறிக்கொண்டிருக்கிற
நரத்தில் ஒரு உறவுக்காக, நட்புக்காக கொடுத்த செய்தி
ரித்து வெளியிடப்பட்டதால் இந்த பிரச்சினை எழுந்தது.
ான் உடனே அடுத்த நாளிலேயே அதற்கான மறுப்புத் தெரி
த்திருக்கிறேன். என்னுடைய நிலையிலே மாற்றம் ஒன்றும்
ல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

11–30 மணி

இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்பதுதான்
ந்த வரி, என்று குறிப்பிட்டிருக்கிறேன். அது எல்லா இதழ்
ளிலும் வந்தது. மேற்கோளாக 'இந்து' இதழ், 'தினமலர்'
தழ்களைக் காட்டியிருக்கிறேன். எனவே அந்த வகையில்,
ந்த நேரத்தில் நான் முன்னுக்குப் பின் முரணாக நடப்ப
ாகவும்—இன்னும் சொல்லப்போனால் பேரவைத் தலைவர்
ன்னே ஒன்று சொல்கிறார், பின்னே ஒன்றைச் சொல்கிறார்,
வர் அரசியல் அழுத்தங்களுக்கு எல்லாம் ஆட்படுகிறார்
ன்ற அளவுக்கு நம்முடைய சட்டமன்றத்தில் இருக்கிற ஓர்
றுப்பினர், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடத்
லே மனுவைக் கொடுத்தபோது, நம்முடைய மாண்புமிகு
டியரசுத் தலைவர் அவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும்
தை ஏற்று எந்தவகையான குறிப்பும் தரவில்லை; அதை
ற்றுக்கொண்டு நீங்கள் விளக்குங்கள் என்றும் சொல்லவில்லை.

எனவே, அவர் அளவில் சிறப்பாக இருந்தார்கள். ஆனால்
ான் பொதுவாக நினைக்கிறேன், நாட்டுமக்களைப் பற்றி.
டியரசுத் தலைவரோ அல்லது வேறு யாருமோ, பேரவைத்
லைவருடைய அலுவல்களில் குறுக்கிட்டு, நீங்கள் இதைச்
சய்துதான் ஆகவேண்டுமென்றோ, இதற்கு விளக்கம் தந்து
ான் ஆகவேண்டுமென்றோ சொல்லவும் மாட்டார்கள்,
வர்கள் சொல்லவும் இல்லை. அவர்களே இந்தப் பேரவையில்

இருந்து நீண்ட நெடுங் காலமாக இருந்து ஆழ்ந்த பட்டறிவு
படைத்தவர்கள். கண்டிப்பாக அவர்கள் முற்றிலும் அதை
நன்றாக உணர்வார்கள். எனினும், இந்த நேரத்தில், சட்ட
மன்றம் கூடப் போகிற நேரத்தில், அப்படிப்பட்ட ஒரு மனுவைக்
கொடுத்து, அந்த மனுவில் நான் ஏதோ முரண்பட்டு நடப்பது
போல ஒரு தோற்றம் அளிக்கிறது. இது குடியரசுத் தலைவர்
என்ற முறையில் அல்ல, நட்பு முறையில் நான் அவர்களுக்கு
எடுத்துச் சொல்ல வேண்டுமென்று விரும்பினேன். எனவே
''இல்லை, அவர்கள் சொன்னதில் முரண்பாடு இருக்கிறது''
என்று குறிப்பிட்டேனே தவிர, மற்றபடி குடியரசுத் தலைவர்
அவர்கள் என்னை வற்புறுத்தவும் இல்லை, நானாக என்னு
டைய இறையாண்மையை குடியரசுத் தலைவரிடத்திலோ
மற்றவர்களிடத்திலோ விட்டுக் கொடுக்கவும் இல்லை.

ஒரு பெருமிதத்தோடு அவர்களுக்கு ஒரு விளக்கம் சொன்
னால், இன்னும் சொல்லப்போனால்—கொஞ்சம் சுயநலத்
தோடு—அவர் நம்மூர்க்காரர் என்ற முறையில் விளக்கம்
சொன்னால் சரியாக இருக்கும், அது பொருத்தமாக இருக்கும்
அவரும் அதைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கும்
என்பதற்காகத்தான் சொல்லப்பட்டதே தவிர, மற்றபடி இதில்
எந்தவிதமான இறையாண்மைக்கும் மாறான செய்தியோ,
அல்லது கண்டிப்பாக அவர் என்னைக் கேட்டு, நான் கொடுத்தேன்
என்ற நிலையோ எழவில்லை என்பதை மட்டும் சொல்லி, இந்த
அளவோடு இந்த விவாதத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** Point of clarification.
மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், நம்மு
டைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராதா அவர்களும் கொடுத்த
கடிதத்தில், இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று—இன்
னின்னார் எல்லாம்—திரு. திருநாவுக்கரசு, திரு. கே. கே.
எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. உகம்சந்த் போன்றவர்கள்
கட்சியை விட்டு நீக்கப்பட்டார்கள் என்றும், அதன் அடிப்
படையிலே அவர்களுடைய துணைத்தலைவர், கொறடா பதவி
கள் இன்னின்னாருக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இருக்
கிறது. அவர்களுடைய வேண்டுகோளில், ஒரு பகுதியை ஏற்றுக்
கொண்டு செயல்படுத்திய நீங்கள், அடுத்த பகுதியை ஏற்றுக்
கொண்டு செயல்படாத காரணம் என்ன என்கின்ற விளக்கத்தை
நாங்கள் அறிய விரும்புகிறோம். ஏனென்றால், அடுத்த
பகுதியைச் செயல்படுத்தாத காரணத்தாலேதான், காலையில்
இங்கே சம்பவங்கள் நடந்தன என்கின்ற காரணத்திற்காக
நாங்கள் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அந்த இரண்டாவது
பகுதி செயல்படுத்தாததற்கான காரணம் என்ன? முதல்
பகுதி செயல்படுத்தப்படுகிறபோது, இரண்டாவது பகுதியும்
செயல்படுத்தித்தானே ஆகவேண்டும் என்ற விளக்கத்தை
அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்டதற்கான விடை, இந்த
அவையின் இறுதியில் தீர்ப்பாக வழங்கப்படும்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவை விதி 9 (1)ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை
இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் மாற்று
தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன் :

(1) திரு. ந. இராமச்சந்திரன்
(2) திரு. அ. இராசேந்திரன்
(3) திருமதி எஸ். பி. சற்குணம்
(4) திரு. ரா. சொக்கர்
(5) திரு. வி. கே. சின்னசாமி
(6) திரு. சோ. அழகர்சாமி

**(ஆ) பணியிலிருந்து ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களைப் பாராட்டி 12–5–1990 ஆம் நாளன்று அவை நிறைவேற்றியுள்ள தனித் தீர்மானத்திற்கு அவர்கள் நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறி
விப்பு : பேரவையில் 12–5–1990 ஆம் நாளன்று நிறைவேற்றப்
பட்ட தீர்மானம் குறித்து, முன்னாள் செயலாளர் திரு. சி. கு.
இராமசாமி அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்
பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன் ;

''பேரன்புடையீர்,

வணக்கம். தங்களது 23–5–1990 ஆம் நாள் கடிதமும்,
சட்டமன்றப் பேரவையில் என்னுடைய பணியைப் பாராட்டி,
1990 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட
தீர்மானமும் கிடைக்கப் பெற்றேன்.

சட்டமன்றத் துறையில் நான் ஆற்றிய 35 ஆண்டுக்கால
பணியைப் பாராட்டி நிறைவேற்றியுள்ள அரசினர் தீர்மானத்
திற்கு என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்

[பேரவைத் தலைவர்] [1990 ஆகஸ்ட் 20

கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவராக விளங்கும் தாங்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு தலைவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும், என்பால் காட்டிய அன்பையும் பரிவையும் நான் நன்கு உணர்வேன்.

என்னுடைய குறைகளைப் பொருட்படுத்தாது, என்னுடைய தகுதிகளைச் சிறப்பித்துப் பேரவையில் என்னைப் பாராட்டியதற்காகக் கடமைப்பட்டவனாவேன். அவற்றைப் பெருமையோடும் பூரிப்போடும் விலைமதிப்பில்லா செல்வமாகவும் நான் ஏற்றுப் போற்றிப் பாதுகாத்து வருவேன். பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**11–35 மணி**

5. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)

(அ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



1990 ஆகஸ்ட் 20]

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1990–91—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990–91ஆம் ஆண்டுக்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

D
V211,31'N96
N90.35.1
143987.

மானியக்கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணைமதிப்பீடு மொத்தம் ரூ. 244.38 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூ. 65.63 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 178.75 கோடி மூலதன, கடன் கணக்கிலும் அடங்கும். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப் பணிகள் குறித்து சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

2. இப்பொழுது வைக்கப்பட்டுள்ள இந்த முதல் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள மொத்தத் தொகையில் ரூ. 170.00 கோடி. நடப்பாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட மிகைப் பற்றுகளைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது. இந்த மானியக் கோரிக்கை அனுமதிக்கப்படுவதால், தேவைக்கேற்ப இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன் பணம் மற்றும் மிகைப் பற்றுக்கள் பெற ஏதுவாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

3. கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை சில மாவட்டங்களில் பொய்த்த காரணத்தினாலும், இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை சில மாவட்டங்களில் போதிய அளவு இல்லாத காரணத்தினாலும் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசு ரூ. 19.5 கோடி அனுமதித்துள்ளது. 3,000 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு ரூ. 7.5 கோடியும், லாரி மூலம் தண்ணீர் விநியோகிப்பதற்கும் மற்றும் இதர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு ரூ. 8 கோடியும், இதர குடிநீர்த் திட்டங்களை செய்து முடிப்பதற்கு ரூ. 4 கோடியும் இதில் அடங்கும். இந்தத் தொகை வெவ்வேறு கோரிக்கைகளின்கீழ் இடம் பெற்றுள்ளது.

4. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு தனித் திட்டம் ஒன்று தீட்டியுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு ரூ. 10.38 கோடி நிதி உதவி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ரூ. 3 கோடியும், துப்புரவுப் பணிகளைச் செம்மையாக செய்வதற்காக 110 லாரிகளை வாங்குவதற்கு ரூ. 4.38 கோடியும், 150 பொது கழிப்பிடங்களை தண்ணீர் மற்றும் விளக்கு வசதிகளுடன் கட்டி முடித்திட ரூ. 3 கோடியும் வழங்கப்படும். இதே போன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 1 கோடியும், மதுரை மாநகராட்சிக்கு ரூ. 4 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு இம்மாநகராட்சிகளில் சாலைகளைச் செப்பனிடுதல், பொது கழிப்பிடங்களைப் பராமரித்தல் மற்றும் கட்டிமுடித்தல், தெரு விளக்கு வசதிகளை மேம்படுத்துதல், பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல் மற்றும்





பராமரித்தல் போன்ற பணிகள் செய்து முடிக்கப்படும். இந்தத் தொகைகள் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சி திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் மற்றும் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்புகளின்கீழ் இடம் பெற்றுள்ளன.

11–40 மணி

5. இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சு போன்ற தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு, தங்களது உடைமைகளை இழந்து, அவலநிலையில் தமிழ்நாட்டிற்கு வந்துள்ள அகதிகளை வரவேற்று, வெவ்வேறு முகாம்களுக்கு அழைத்துச் சென்று அவர்கள் தங்குவதற்கு இடவசதிகளை செய்து கொடுத்து, அவர்களுக்கு துணி, சமையல் சாமான்கள், பண உதவி முதலியன கொடுத்துதவ அரசு ரூ. 5.66 கோடி அனுமதித்துள்ளது. மேலும் சுதந்திர தினத்தை ஒட்டி ஒவ்வொரு அகதி குடும்பத்திற்கும் இலவசமாக புத்தாடை வழங்குவதற்காக ரூ. 34.32 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகைகள் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள், கோரிக்கை எண் 43—பல்வகை மற்றும் கோரிக்கை எண் 53—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்புகளின்கீழ் இடம் பெறுகின்றன.

6. வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவதற்கு போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் 1,000 வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கி பொருத்துவதற்கு அரசு அனுமதித்துள்ளது. இதற்கென தேவைப்படும் ரூ. 1 கோடி கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் என்ற தலைப்பின்கீழ் கோரப்பட்டுள்ளது.

7. நகராட்சிகள் கடன் உதவியைக் கொண்டு குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டங்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்திற்கு ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டு ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுழல் நிதியைக் கொண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வு மேற்கொள்ளும். இதற்குத் தேவையான நிதி, கோரிக்கை எண் 49—குடி நீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் கோரப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினாலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினாலும் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டிருந்த அடுக்குமாடி வீடுகளை, தவணை முறையில் பணம் பெற்றுக்கொண்டு குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக்க அரசு திட்டம் வகுத்துள்ளது. குடியிருப்பவர்களுக்கு

அந்த வீடுகளை உரிமை மாற்றம் செய்வதற்கு முன்னர் பழுது பார்க்கும் பணிகளுக்காக ரூ. 2 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இது கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. சென்னையில் விரைவு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை செய்து முடிக்கும் பணியை சென்னைப் பெருநகர் போக்குவரத்துப் பிரிவு (இரயில் போக்குவரத்துத் துறை) மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக அரசு சுமார் 18 ஹெக்டேர் நிலத்தை இலவசமாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த போக்குவரத்துத் திட்ட பணிகள் நடந்து கொண்டிருக்கும் இடங்களில் வசித்து வந்த குடும்பங்களை அங்கிருந்து மாற்றி வேறு இடம் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்தது. இதற்கென ரூ. 27.42 இலட்சம் தேவைப்படுகிறது. இத்தொகை கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. நெசவாளர் நலன் காக்கும் இந்த அரசு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு உதவித் தொகையாக ரூ. 9.37 கோடி வழங்கியுள்ளது. இதனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பெற்று வலிவுறும். இந்தத் தொகை கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் கோரப்பட்டுள்ளது.

11. நிதி நிலை அறிக்கையில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சேலத்திலிருந்தே செயல்பட நடவடிக்கை எடுப்போம் என்று அறிவித்து இருந்தேன். அதற்கென தேவையான பணியிடங்களை ஏற்படுத்தி தளவாடங்கள் மற்றும் இதர சாமான்கள் வாங்குவதற்காகவும் ஆணையிடப்பட்டு ரூ. 55.24 இலட்சம் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் காவல் ஆணையகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவைப்படும் பணியிடங்களை ஏற்படுத்துவதற்கும், தளவாடங்கள் மற்றும் வாகனங்கள் வாங்குவதற்கும் தேவைப்பட்ட தொகையான ரூ. 5.44 கோடி எதிர்பாரா நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இந்தத் தொகை கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் இடம் பெறுகின்றது.





13. சிறுநீரகக் கோளாறுகளினால் அவதிப்படும் ஏழை க்களுக்கு சிறந்த சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் சென்னை பாது மருத்துவ மனைக்கு ரூ. 2.10 கோடி அனுமதிக்கப் ட்டுள்ளது. இந்தத் தொகை தேவையான மருத்துவ இயந்திரங் ளை வாங்குவதற்காகவும், சில கட்டிட மாறுதல்களை சய்து முடிப்பதற்காகவும் உபயோகப்படுத்தப்படும். இது காரிக்கை எண் 18—மருத்துவம் மற்றும் 52—பொதுப் ணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற லைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாட்டிலுள்ள மேற்கு மலைத் தொடர்ப் பகுதி ரில் காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கான திட்டத்தை சயல்படுத்துவதற்காக அரசு ரூ. 2.87 கோடி அனுமதித் ள்ளது. இதற்கென ரூ. 2.15 கோடி எதிர்பாரா நிதியிலிருந்து ழங்கப்பட்டுள்ளது. இது கோரிக்கை எண் 56—காட்டு வளம் றித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப் ட்டுள்ளது.

15. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள சலவினங்களில் முக்கியமானவற்றைப் பற்றி நான் இதுவரை டுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரிவான விளக்கக் குறிப்புகளில் இந்த இனங்களுக்கான விவரங் ளைக் காணலாம். 1990-91 ஆம் ஆண்டிற்கான முதல் ணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வண்டுகிறேன். வணக்கம்.

-45 மணி

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1990-91—வெட்டுத் தீர்மானங்கள் அளிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1990-91 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை திநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 21-8-1990 வற்றைப் வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் பேரவைச் செய லகத்தில் சேர்க்க வேண்டும்.

7. அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சற்றுமுன் எழுப்பப்பட்ட சிக்கல் குறித்த தீர்ப்புரை :

23–7–1990 அன்று அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் வெவ்வேறு கடிதங்களைப் பேரவைத் தலைவர்க்குக் கொடுத் துள்ளனர். அதில், திரு. திருநாவுக்கரசு, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் , திரு. உகம்சந்த் ஆகிய மூவரும் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வகித்து வந்த துணைத் தலைவர், கொறடா ஆகிய பதவிகளில் கீழ்க் கண்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

| | |
|---|---|
| திரு. கே. ஏ. செங்கோட்டையன் .. | துணைத் தலைவர் |
| திரு. கே. அர்ஜுனன் .. | கொறடா |
| திரு. துரை இராமசாமி .. | செயலாளர் |

ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் மீது நடவடிக்கை மேற் கொள்ளும் முன் தொடர்புடைய அந்த உறுப்பினரிடமிருந்து விளக்கம் பெறுவதே முறையானது.

நாடாளுமன்ற முன்னாள் செயலர் சுபாஷ் கஷ்யப் அவர்கள் தன் குறிப்புரையில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகின்றார் :

"The Speaker shall not come to any finding that a member has become subject to disqualification without affording a reason-able opportunity to such member to represent his case and to be heard in person. It is therefore clear that ample provision has been made in the Rules of the Presiding Officers to follow rules of natural justice while deciding cases of disqualification on ground of defection."

1985 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின்படி உறுப்பினர் ஒருவர், தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து தன்னிச்சையாக விலகினாலோ அல்லது அவர் கட்சியின் ஆணைக்கு மாறாக அவையில் வாக்களித்தாலோ அல்லது வாக்களிக்காமல் இருந்தாலோ மட்டுமே அவர் தகுதி யின்மைக்கு உட்படுவார் என்று கருதப்படும். மாறாக அத்தகைய உறுப்பினர் ஒருவர் அவர் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதன் காரணமாக அன்னாரது உறுப்பினர் பதவிக்கு எந்தக் குந்தகமும் ஏற்படுவதில்லை.

அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதி யுள்ள கடிதங்களில்தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப் பெற்றுள்ள தாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு.



1985-ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலில் 6-வது பத்தியின்படி பேரவை உறுப்பினர் ஒருவர் தகுதியின்மைக்கு உட்பட்டுள்ளாரா என்பதை முடிவு செய்யக் கூடியவர் பேரவைத் தலைவர் என்பதோடு அவரது முடிவே இறுதியானதும் ஆகும்.

11-50 மணி

அவை முன் உள்ள இந்த நேர்வில் அரசியல் அமைப்புச் சட்டமோ அல்லது அதன் அடிப்படையில் உருவாக்கப் பெற் றுள்ள விதி முறைகளோ நேரடியாகச் செயற்படும் நிலை உருவாக வில்லை. இது, கட்சித் தாவல் எனும் கட்டத்திற்கு வராமல் ஓர் அரசியல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பான விவ காரம் ஆகும். That is Expulsion.

Explusion குறித்து நமது சட்ட விதிகளில் ஏதும் தெளி வாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நாடாளுமன்ற நடை முறையில் பல தீர்ப்புகள், பிற சட்டமன்றங்களின் குறிப்புரை கள் ஆகியவை முன் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

மேலும் ஓர் உறுப்பினர் மீது எந்த நடவடிக்கை எடுப்ப தாயினும் தீர்ப்புக்கு முன்னால் பல முறை ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது கடமையாகும். பேரவைத் தலைவரின் தீர்ப்புக்குப் பின் எவரும் இது குறித்து நீதிமன்றம் செல்ல இயலாது எனும் நிலையில் என் பொறுப்பு இன்னும் மிகுதியாகின்றது.

பத்தாவது அட்டவணையில் உள்ள 7-வது உட்பிரிவு கீழ்க் கண்டவாறு அமைகிறது :

BAR OF JURISDICTION OF COURTS.—Notwithstanding anything in this Constitution, no court shall have any jurisdiction in respect of any matter connected with the disqualification of a member of a House under this schedule.

மேலும், திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மற்றும் எஸ். டி. உகம்சந்த் ஆகி யோர் உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருப்பதற்கு எந்தக் குந்தகமும் இதுவரை ஏற்படவில்லை. நடைபெற்றுள்ள நிகழ்ச்சி

அ.இ.அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற முறையில் செல்வி ஜெயலலிதாவும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் திரு. எஸ். ஆர். இராதாவும் பேரவைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தங்கள் கட்சியிலிருந்து 3 உறுப்பினர்கள் நீக்கப்பெற்றுள்ள தாகத் தெரிவித்துள்ளது குறித்த தீர்ப்பு.



கள் யாவும் பேரவைக்கு வெளியே நடைபெற்றவையே. எனவே தான் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் அக்கட்சியின் சில உறுப்பினர் கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள ஒரு முடிவு பேரவையை எந்த அளவுக்குப் பாதிப்புக்குள்ளாக்கும் என்பது குறித்து முடிவு செய்யும் முன்னர் தொடர்புடையவர்கள் தம் நிலை அறிய ஒரு வாய்ப்புத் தரும் வகையில் கடிதம் எழுதப்பட்டது.

அவர்களும் தங்கள் நிலையை விளக்கியிருப்பதுடன், தாங்கள் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களாகவே செயற்படும் வகையில் பெறப்பட்டுள்ள நீதிமன்றத் தடையாணையையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த நேர்வில் தொடர்பு படுத்தப்பட்டுள்ளவர்களின் கருத் தினையும் கேட்டறிவது உகந்ததாய் இருக்கும் என்று கருதிய தாலும், அவர்களும், தங்கள் நிலையை விளக்க ஒரு வாய்ப்பு அளிப்பது நியாயமாக இருக்கும் என்று கருதியதாலும், அவர் களிடம் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்படி கேட்டு கடிதம் எழுதப்பெற்றுள்ளது. நீதிமன்றத்தினுடைய தடையாணையின் படி 23-8-1990 முடிய அவர்கள் துணைத் தலைவர், கொறடா முதலிய பதவிகளில் இயங்கக் கூடாது என்ற கருத்தினையும், செல்வி ஜெயலலிதா, மாண்புமிகு எஸ். ஆர். இராதா ஆகியோர் தம் கடிதங்கள் தரும் அறிவிப்புக்களையும் கருத்தில் கொண்டு இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்போது நம் முன் உள்ள சிக்கல் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகிய மூவரும் அ.இ.அ.தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்டுள்ளார்களா ? அல்லது அதிலேயே நீடிக்கிறார்களா ? என்பது குறித்து முடிவு எடுப்பதுதான். எனினும் இச்சிக்கல் வழக்காக உருவெடுத்து இப்போது நீதிமன்றத்தில் உள்ளது.

பொதுவாகவே, நீதி மன்றத்திலுள்ள ஒரு பொருள் குறித்து இந்த அவை விவாதிப்பதில்லை: 'Subjudice' என்ற மரபைக் கடைப்பிடித்து வருகிறது. இந்நிலையில் தற்போது நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடையாணை அ.இ. அ.தி.மு.க. கட்சி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாய் உள்ளபடியாலும், நீதிமன்றத்துடன் இந்த அவை ஒரு நல்ல உறவைப் பேணிக்காக்க வேண்டியதன் இன்றியமையா மரபின் காரணமாகவும், தற்போது எனது ஆய்வில் உள்ள இந்த நேர்வு குறித்த எனது முடிவினை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளேன் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





8. பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளை ஆதாரமாகக் காட்டி சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு அளித்த மனுக்களில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் பேரவை உறுப்பினர் பதவி தகுதியின்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளதையொட்டிய தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றொரு தீர்ப்பு.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. மாரப்பன்,
கே. பொன்னுசாமி, ஆர். அண்ணா நம்பி மற்றும் க. பழனிசுவாமி
ஆகியோர் பத்திரிகையில் வந்த செய்திகளை ஆதாரமாகக்
கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கொ. மாதப்
பன், ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும் திரு. வெ. இராசு
ஆகியோர் 1985 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்திரண்டா
வது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலின்
கீழ் பேரவை உறுப்பினர் தகுதியின்மைக்கு ஆளாகிவிட்டார்கள்
என்று 19—8—1990 ஆம் தேதியிட்ட தங்கள் மனுக்களில்
கூறி, அவற்றை எனக்குக் கொடுத்துள்ளார்கள்.

1985 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்திரண்டாவது
திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலின்
2 வது பாராவின்படி கீழ்க்கண்ட ஒரு நேர்வுகளில் மட்டுமே
ஒரு அரசியல் கட்சி மூலமாகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்
பட்ட பேரவை உறுப்பினர் தகுதியின்மைக்கு ஆளாகின்றார்.

(1) தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து தன்னிச்சையாக அவராகவே அக்கட்சியிலிருந்து விலகினால் ; அல்லது

(2) பேரவையில் வாக்கு எடுப்பில் கட்சியால் விடுக்கப்பட்ட கட்டளைக்கு மாறாக வாக்களித்தாலோ அல்லது வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமல் இருந்தாலோ தான் தகுதியின்மைக்கு ஆளாகிறார்.

11-55 மணி

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கொ. மாதப்பன்,
ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும்
வெ. இராசு ஆகியோர் அ.இ.அ.தி.மு.க.-விலிருந்து தன்னிச்
சையாக விலகியதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. எனவே,
1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை உறுப்பினர்கள்
(கட்சி மாறுதல் காரணம் கொண்டு தகுதியின்மையாக்குதல்)
விதிகளில் 7-வது விதி, உள்விதி (2)-ன் கீழ் மாண்புமிகு உறுப்
பினர்கள் திருவாளர்கள் பி. மாரப்பன், கே. பொன்னுசாமி,
ஆர். அண்ணாநம்பி மற்றும் க. பழனிசுவாமி ஆகியோர்
கொடுத்த மனுக்களைத் தள்ளுபடி செய்கிறேன் என்பதைப்
பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8 பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளை ஆதாரமாகக்
காட்டி சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு அளித்த
மனுக்களில் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த 4 உறுப்பினர்...
கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் பேரவை உறுப்பினர்
பதவி தகுதியின்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று
தெரிவித்துள்ளதையொட்டிய தீர்ப்பு.

[1990 ஆகஸ்ட் 20

THIRU KUMARI ANANTHAN : Sir, point of clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பின்மீது எந்த
Clarification-ம் கிடையாது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,
நாளை (21–8–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும்
கூடும்.

பின்னர் பேரவை 11-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்
வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்
1–12–1989 ஆம் நாளிட்ட 637 ஆம் எண். அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச்
சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது].

2. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்
வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்
29–11–1989 ஆம் நாளிட்ட 631 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச்
சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது).

3. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்
ஆளுகைக்குள் வரும் சில எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டு
றவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்ட நிலக் கட
லைக்கு விதிக்கக் கூடிய வரியினை ரத்து செய்வது குறித்து
வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29–1–1990
ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].





4. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்
வாணைய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்
1–12–1989 ஆம் நாளிட்ட 638 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச்
சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது).

5. நெய், பருத்தி, நிலக்கடலை, மிளகாய் மற்றும் அனைத்து
வடிவிலான கரும்பு வெல்லம் ஆகியவற்றை பொறுத்த மட்டில்
ஆண்டிப்பட்டி அங்காடிப் பகுதியினை அறிவிக்கப் பெற்ற அங்
காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின்
6–11–1989 ஆம் நாளிட்ட 835 ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு
வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது].

6. சூரிய காந்தி விதைகளை பொறுத்த வரை பெரியார்
மாவட்டத்தினை அறிவிக்கப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறி
விப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 2–1–1990 ஆம்
நாளிட்ட 7 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி
விக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள்
அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

7. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்
சட்டத்தின் 34-வது பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள அலுவல்
களை நிறைவேற்றும் வகையில், இணை ஆணையாளர்களுக்கு
உள்ளூர் வரம்புகளை ஒதுக்குவதற்கு உண்டான அதிகாரத்
தினை வணிக வரிகள் ஆணையருக்கு வழங்குவது குறித்து
வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 12–12–1989
ஆம் நாளிட்ட 878 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப் பெற்ற
தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்
கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 17–5–1989 ஆம்
நாளிட்ட 535 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்
பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 29/1974) 57 (2) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது.

9. சிறுதீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற்பணிக் கூட்டுறவுச் சங்கங்களினால் 3-1-1970 முதல் 20-5-1982 முடியவுள்ள காலவரையில் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்த பெயர்ச் சீட்டு மற்றும் சிப்பப் பொருட்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் - சமய அறக்கட்டளைகள் துறையின் 3-2-1990 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. சென்னை, மிஷினரிஸ் ஆஃப் சாரிட்டி அவர்களுக்கு சொந்தமான டி.எம்.டி. 5026 மற்றும் டி.எம்.டி. 4871 ஆகிய ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 10-1-1990 ஆம் நாளிட்ட 63 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

11. சேலம், மிஷினரிஸ் ஆஃப் சாரிட்டி அவர்களுக்கு சொந்தமான டி.சி.ஈ. 4591 எண் கொண்ட ஜீப் ஆம்புலன்ஸ்க்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 8-2-1990 ஆம் நாளிட்ட 300 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

12. புதுக்கோட்டை மாவட்டம், பத்ரேகுடியிலுள்ள 'அவர் லேடி ஆஃப் ஹெல்த் டிஸ்பென்சரிக்குச் சொந்தமான டி.என்.பி 4713 எண் கொண்ட மகிந்திரா ஆம்புலன்ஸ் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 15-12-1989 ஆம் நாளிட்ட 2727 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

13. சென்னை, ஜெர்மானிய தொழு நோய் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நிதி மையத்தினருக்குச் சொந்தமான டி.எம்.ஜே. 2549 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு வழங்கி வந்த சலுகை முறை வரி விதிப்பினை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 8-3-1990 ஆம் நாளிட்ட 511 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு





1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது.]

14. கும்பகோணம் இந்து (மிஷன்) மருத்துவ நிலையத்திற்குச்
சொந்தமான டி.ஏ.ஓ. 6368 எண் கொண்ட மோட்டார் வண்
டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின்
15-12-1989 ஆம் நாளிட்ட 2730 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.]

15. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் வழங்கு
பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு,
உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 12-2-1990
ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன்
வழங்குபவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22 (3)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

16. 1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின்
(மத்தியச் சட்டம் 14/1947) முதலாவது அட்டவணையில் 'பண்
டகச் சாலைகள் கொள்முதல் மற்றும் இன்றியமையாப் பண்
டங்களின் விநியோகங்களில் ஈடுபட்டுள்ள நுகர்வோர் கூட்டுறவு
சங்கங்கள்' என்பதை சேர்ப்பது குறித்து தொழிலாளர் -
வேலை வாய்ப்புத் துறையின் 29-1-1990 ஆம் நாளிட்ட 146 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம்
ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்
14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

17. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நில சீர்திருத்த (உபரி
நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்
வது குறித்து வருவாய்த் துறையின் 23-10-1989 ஆம் நாளிட்ட
1816 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
(தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு
நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112
(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

18. குன்னூரில் உள்ள இந்திய குடும்பக் கட்டுப்பாடு சங்
கத்தினருக்குச் சொந்தமான டி.எம்.என். 7307 எண் கொண்ட
ஜீப்பிற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறை
யின் 23-1-1990 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 13/1974) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

19. குன்னூரிலுள்ள இந்திய பாஸ்டர் இன்ஸ்ட்டியூட்டிற்குச் [1990 ஆகஸ்ட் 20
சொந்தமான டி.என்.என். 7198 எண் கொண்ட டிரக்கிற்கு
சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின்
15-12-1989 ஆம் நாளிட்ட 2731 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974)
25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

20. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லறை
விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்,
மதுவிலக்கு - ஆயத்தீர்வைத் துறையின் 2-2-1990 ஆம் நாளிட்ட
158 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
(தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது).

21. மேல்மருவத்தூர், ஆதி பராசக்தி அறக்கட்டளை,
மருத்துவம், கல்வி மற்றும் பண்பாட்டு பொறுப்பாட்சிக்குச் சொந்
தமான டி.டி.எச். 9990 எண் கொண்ட ஜீப்பிற்கு சலுகை
முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 10-1-1990
ஆம் நாளிட்ட 61 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார்
வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்) (தமிழ்நாடு சட்டம்
13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

22. அரக்கோணம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்கு
சொந்தமான மோட்டார் வண்டிகளுக்கு சலுகை முறையில்
வரி விதிப்பது குறித்து உள் துறையின் 15-12-1989 ஆம் நாளிட்ட
2729 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
(தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி
விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

23. சென்னை, மனநோய் நலன் மற்றும் ஆராய்ச்சி மையத்
தினருக்கு சொந்தமான மோட்டார் வண்டிகளுக்கு சலுகை
முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 31-3-1990
ஆம் நாளிட்ட 702 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார்
வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)

24. மதுரை, செஸ்ஹயர் ஹோம்ஸ் இந்தியாவுக்குச் சொந்த
மான டி.ஏ.யு. 6245 எண் கொண்ட ஆட்டோ ரிக்ஷாவிற்கு
சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின்
5-3-1990-ஆம் நாளிட்ட 470 ஆம் எண் அரசாணையில்



990 ஆகஸ்ட் 20]
வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு
மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது).

25. பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் எந்த
ஒரு வடிவிலும் மேற்கொள்ளப்படும் ஆமணக்கு கொள்முதல்
மற்றும் விற்பனையினை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்
மைத் துறையின் 29-7-1989 ஆம் நாளிட்ட 556 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்
நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது).

26. சென்னை, சிறப்புக் கல்வி மையத்தினருக்குச் சொந்த
மான மோட்டார் வண்டிகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது
குறித்து 16-12-1990-ஆம் நாளிட்ட 335-ஆம் எண் அர
சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம்
ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது).

27. சென்னை, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குச்
சொந்தமான டி.சி.எக்ஸ். 5111 எண் கொண்ட ஸ்டாண்டர்ட்
20 வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள்
துறையின் 1-1-1989-ஆம் நாளிட்ட 2363 ஆம் எண் அர
சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம்
ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்
நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது).

28. தேசிய அனுமதியுடன் கூடிய சரக்கு வண்டிகளின் தவ
றான எடைப் பதிவேடுகளினால் ஏற்பட்ட வருவாய் இழப்
பினை தள்ளுபடி செய்வது குறித்து உள் துறையின் 13-2-1990
ஆம் நாளிட்ட 329 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார்
வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/
1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

29. மானாமதுரை, தொழு நோய் மிஷினைச் சேர்ந்த
மோட்டார் வண்டிகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது
குறித்து உள் துறையின் 26-3-1990-ஆம் நாளிட்ட 659 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்
நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது).

30. தும்பபாளையம் — வேலூர் தடத்தில் ஓடுகின்ற ஏ.பி.சி. 4316, ஏ.பி.சி. 5990 மற்றும் டி.எம்.எஸ். 5990 ஆகிய மோட்டார் வண்டிகளுக்கு விதிக்கக் கூடிய வரி மற்றும் மேல் வரியினை தள்ளுபடி செய்வது குறித்து உள் துறையின் 19–1–1990 ஆம் நாளிட்ட 131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

31. சென்னை, பாலவிஹாருக்குச் சொந்தமான டி. என். 01–3614 எண் கொண்ட சிறிய பேருந்திற்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 8–3–1990 ஆம் நாளிட்ட 513 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

32. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 12–6–1989 ஆம் நாளிட்ட 337 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

33. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதலாவது அட்டவணையில் ''தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் சாராவிகளை உற்பத்தி செய்யும் வடிசாலைகள்'' என்பதை சேர்ப்பது குறித்து தொழிலாளர் — வேலை வாய்ப்புத் துறையின் 25–9–1989 ஆம் நாளிட்ட 1733 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 40 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

34. குதிரைப் பந்தயத் துறையின் பொறுப்பாளர் அவர்களால் சென்னை குதிரைப் பந்தயத் திடலில் நடத்தப்படும் அனைத்து பந்தயங்களுக்கும் வரிவிதிப்பது குறித்து வணிக வரிகள் - சமய அறக்கட்டளைகள் துறையின் 25–10–1989 ஆம் நாளிட்ட 773 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

35. அரக்கோணம், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குச் சொந்தமான ஏ.டி.பி. 7772 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள்





துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 703 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு — ஆயத் தீர்வைத் துறையின் 25–7–1989 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

37. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் - நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 27–2–1989 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

38. சுரிகிரி தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்திற்குச் சொந்தமான சில. மோட்டார் வண்டிகளுக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 20–3–1990 ஆம் நாளிட்ட 609 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

39. இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம், தமிழ்நாடு கிளைக்குச் சொந்தமான டி.எஸ்.ஏ. 203 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 31–3–1990 ஆம் நாளிட்ட 700 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

40. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 7–9–1988 ஆம் நாளிட்ட 1948 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1990 ஆகஸ்ட் 20

41. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் மதுவிலக்கு – ஆயத் தீர்வைத் துறையின் 24–1–1990 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

42. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 31–5–1990 ஆம் நாளிட்ட 980 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

43. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் மதுவிலக்கு – ஆயத்தீர்வைத் துறையின் 12–12–1989 ஆம் நாளிட்ட 1324 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ). அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பொது நிறுவனங்கள் பட்டியலில் ''தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம்'' என்பதை சேர்ப்பது குறித்து 20–6–1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

2. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் இரண்டாம் திருத்தம் மற்றும் சிறப்பு வகை முறைகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1990).

D
V211,31'N90
N90.351
143987
600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3,
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.